விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 21 வெள்ளிக்கிழமை (04.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## சாதாரண தர பெறுபேறு வெளியானது வேம்படி மகளிர் கல்லூரி முன்னிலையில்

(யாழ்ப்பாணம்)

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை-2013 ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகள் நேற்று வெளியான அடிப்படையில் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை மாணவிகள் 28 பேருக்கு 9ஏ சித்திகிடைக்கப்பெற்றுள்ளதோடு வடக்கு மாகாணத்தில் அப்பாடசாலை முதலிடத்தை பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இப்பாடசாலையில் 246 மாணவிகள் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். அதில் 246 மாணவிகளும் சித்தியடைந்துள்ளனர். அதேவேளை 28 மாணவிகளுக்கு 9-ஏ சித்திகளும் 51 மாணவிகளுக்கு 8- ஏ, ஒரு பி. சித்திகளும், 29 மாணவிகளுக்கு 8 ஏ, ஒரு- சி, சித்திகளும், 5 மாணவிகளுக்கு 8-ஏ, ஒரு எஸ் சித்திகளும் கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளை 7 ஏ சித்திகளை 33 மாணவிகள் பெற்றுள்ளனர்.

அத்தோடு பரீட்சைக்கு தோற்றியவர்களில் 60 வீதமானவர்கள் 7ஏ க்கு மேல் சித்திகள் பெற்றுள்ளனர் என பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளும் பெறுபேறுகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளன.

அதன அடிப்படையில் 19 ஆம் பக்கம் பார்க்க..

# பயங்கரவாத ஒழிப்பில் தொடர்ந்து அவதானம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையில் பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போதும், எந்த நேரமும் அதுபற்றி அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். சிங்கப்பூர் மற்றும் இலங்கை மாணவர் ஒன்றியத்தினால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இந்த கருத்தை அவர் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாதம் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் தகவல் திரட்டல் குறித்து எந்த தரப்பினருக்கும் கேள்வியெழுப்ப முடியாது. புலம்பெயர்ந்த அமைப்புகள் சில தொடர்ந்தும் பிரிவினைவாதம் எனும் கனவினை இன்னும் கைவிடவில்லை.

நாங்கள் அதற்கு ஏற்றவகையில் எதிராக செயற்படவேண்டியது அவசியமாகிறது.

30 வருடகால காலத்தில் மிக அதிகமான இழப்பின் மூலம் நாம் பயங்கரவாதத்தை முறியடித்தோம்.

இதுகுறித்து நாம் தொடர்ந்தும் அவதானமாக இருக்க வேண்டும்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வந்துள்ள சிங்கப்பூரின் வெளிவிவகார மற்றும் நீதியமைச்சர் கே.சண்முகமும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். (எ-11)

## றெக்சியன் கொலை வழக்கு சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்சியன் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் வீட்டில் இருந்து சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப் 19 ஆம் பக்கம் பார்க்க..

## தமிழீழத்தை உருவாக்க உதவி எதுவும் இல்லை

### பா.ஜ.க. அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமிழீழம் அமைவதற்கு பாரதீய ஜனதா கட்சி ஒத்துழைக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த கட்சியின் சிரேஷ்ட தலைவர் வேங்கையா நாயுடு இதனைத் தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியின் கூட்டணியில் போட்டியிடும் வை.கோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் அண்மையில் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையில் தமிழீழம் அமைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் இதனை நிராகரித்துள்ள வேங்கையா நாயுடு, ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் தீர்வு காணவே பாரதீய ஜனதா கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துள்ளார். (எ-11)

## கேப்பாப்பிலவு மக்களுக்கு நிரந்தர வீடுகள் கையளிப்பு

### பாதுகாப்புச் செயலர் வழங்கினார்

(கொழும்பு)

இலங்கையின் யுத்த மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்திருந்த மக்களில் 98 வீதமானவர்கள் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டிருப்பதாகவும், அவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு அவசியமான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு மாதிரி கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 101 நிரந்தர வீடுகளைப் பயனாளிகளுக்குக் கையளித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கேப்பாப்பிலவு கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள 320 குடும்பங்களில் 65 குடும்பங்களுக்கு ஏற்கெனவே கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாவது தொகுதியாக நேற்று வியாழனன்று இந்த 101 வீடுகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 19 ஆம் பக்கம் பார்க்க..

## ஜனாதிபதி மகிந்தவுடன் சிங்கப்பூர் அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகம் நேற்று மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், எதிர்காலத்தில 19 ஆம் பக்கம் பார்க்க..

## முல்லைத்தீவு பகுதியில் பாரிய குண்டு வெடிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு உடையார்கட்டு பிரதேசத்தில் இருந்த பாரிய வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராணுவ ஆயுதக் களஞ்சியத்தில் இந்த சம்பவம் ஏற்பட்டிருக்கலாம் என தெரியவருகிறது.

முல்லைத்தீவு மாவட்டம், உடையார்கட்டு, குரவயல் பக்கமாக காடுகளை 19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜெனிவா தீர்மானத்திற்கு ஒத்துழைப்புத் தேவை

## சரத் பொன்சேகா கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளினால் சட்டரீதியாக நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வீண் வாதங்களினால் பிரயோசனமில்லை. அவர்கள் தீர்மானம் நிறைவேற்றினால் எமக்கென்ன என்று முட்டாள்தனமான கதைகளை பேசிக் கொண்டிருக்காது அதற்கு முகம் கொடுத்து பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் எனவும் பொன்சேகா கூறியுள்ளார்.

இலங்கை மீது சுமத்தப்படும் போர் குற்றங்கள் பொய்யானது என்பதை ஒப்புவிக்க, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் ஆரம்பிக்க உள்ள விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர நாயகம் ஹசன் அலி தெரிவித்திருந்தமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே பொன்சேகா இதனை குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# முதல் 10 இடங்களில் தமிழ் மாணவர்கள் இல்லை

(கொழும்பு)

வெளியாகியுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி முதல் 10 மாணவர்களுள் தமிழ் மாணவர்கள எவரும் தெரிவாகவில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தை கம்பஹா ரத்னாவலி மற்றும் கொழும்பு விசாகா வித்தியாலயத்தின் மாணவிகள் இருவர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

கம்பஹா ரத்னாவலி மகளிர் வித்தியாலயத்தின் மெனுஷிகா ஜயந்தி காரியவசம் மற்றும் கொழும்பு விசாகா வித்தியாலயத்தின் தபோதா ஹரிந்திரி கங்கொடவில ஆகிய மாணவிகளே சிறப்புச் சித்திகளை பெற்றுள்ளனர்.

இதேவேளை, இரண்டாவது இடத்தை மாத்தறை ராகுல வித்தியாலயத்தின் உச்சித தேஷான் என்ற மாணவனும், மூன்றாவது இடத்தை கொழும்பு ஆனந்தா கல்லூரியின் ரவீன் லசிந்து தென்னகோன் என்ற மாணவனும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

நான்காவது இடத்தை காலி சவுத்லண்ட் வித்தியாலயத்தின் டி.எஸ்.ரொஷானா தரிந்தி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியின் கலிந்து செத்திக விக்கிரமசிங்க என்ற மாணவனும், விசாகா வித்தியாலயத்தின் என்.எச். திலினி இந்துனில் என்ற மாணவியும் பகிர்ந்துகொண்டுள்ளனர்.

5 வது இடத்தை கண்டி மகாமாயா கல்லூரி மாணவியும், குருணாகலை மலிதேவ மகளிர் வித்தியாலய மாணவியும் பெற்றுக் கொண்டனர்.

இதனிடையே, கடந்த வருடம் இடம்பெற்ற சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புச் சித்திகளை பெற்ற முதல் 5 மாணவ மாணவிகள் நேற்று முற்பகல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் பெற்றோரும், பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, ஜனாதிபதியினால் குறித்த மாணவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-11)

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532
valampurii@yahoo.com

# வாழ்வக மாணவர்கள் நால்வர் சித்தி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகத்தில் தங்கியிருந்து கல்வி பயிலும் நான்கு விழிப்புலவலுவிழந்த மாணவர்கள் கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தி பெற்று உயர் தரம் கற்கும் தகுதி பெற்றுள்ளனர்.

சி.யோகதாஸ் 5ஏ, 2பி, 2சி

க.பிரகான் 4ஏ, 1பி, 2சி, 3எஸ்

பொ.தீபன் 2ஏ, 2பி, 2சி, 3எஸ்

செல்வி வி. நளாயினி 2ஏ, 1பி, 3சி, 1எஸ்

ஆகிய மாணவர்கள் சித்தியடைந்தவர்களாவர். (எ)

சதா பொன்ஸ் - அல்வாய்
O/L மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்
05.04.2014
காலை – 8.00 மணி
A/L 2016 கலை, வணிகப் பிரிவுகள்
புதிய வகுப்புக்களும் ஆரம்பம் -இயக்குநர்
(C-6869)

உடனடி வேலை வாய்ப்பு
(Management Trainees)
2014

STUDY&WORK IN NORTH PROVINCIAL
யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சிக்கு
யாழ்ப்பாணம் /கிளிநொச்சி/முல்லைத்தீவு/வவுனியா ஆகிய பிரதேசங்களில்
பயிற்சி பெற விரும்புவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
* பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
* பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும் (Fixed income packge 12000/=).
* பயிற்சியின் பின்னர் அடிப்படை சம்பளம் EPF/ETF அடங்கலாக ரூபா 60000/= மேல் பெறலாம்.
* தொழில் நிரந்தரமாக்கப்படும்.
* பயிற்சி காலம் 03-06 மாதங்கள் (2014,March-August)
GRANTON INTERNATIONAL (PVT)L.T.D
73,ST ANNE CHURCH, ROAD,
ARIYALAI-JAFFNA
CONDUCT-0777274795/0215686466
(C-6866)

Fever of Job Opportunities
O/L, A/L தகைமைகளுடன் காத்திருப்போருக்கான வேலைவாய்ப்பு.....
அதிவேகமாக வளர்ந்து வரும் எமது Innovage நிறுவனத்திற்கான வேலையாட்கள் தெரிவு. முந்தும் 20 பேரினை தேர்வின் அடிப்படையில் தெரிவுகள் நடைபெறும்.
தங்குமிட வசதி உண்டு. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் உண்டு. (6069)
தொடர்புகள், மேலதிக தகவலுக்கு : 0777009820, 0771908997

# முதியவரை மோதிய யுவதி இருவரும் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

மஞ்சள் கோட்டுக் கடவையால் வீதியை கடக்க முற்பட்ட முதியவர் மீது பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளால் மோதி விபத்துக்குள்ளானதில் அப் பெண்ணும் முதியவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி சிவன் கோயில் முன்பாக இடம் பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் சிவன் வீதியை சேர்ந்த எஸ்.முருகையா (வயது 65) மற்றும் எ.வைஸ்ணவி (வயது 20) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்று சுமார் அரை மணிநேரமாக படுகாயமடைந்த முதியவர் வீதியில் இரத்த வெள்ளத்தில் கிடந்த போதிலும் வீதியால் சென்ற எவரும் உதவிக்கு முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் விபத்து தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-11)



## துயர் பகிர்கின்றோம்


அமரர் அருணாசலம் மகாலிங்கம்

எமது சக ஆசிரியை திருமதி நிரஞ்சினி பிரேமச்சந்திரன் அவர்களின் மாமனார் அமரர் அருணாசலம் மகாலிங்கம் கடந்த 16.03.2014 அன்று இறையடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யாழ்/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்.
(6058)

## நன்றி நவிலல்

பிறப்பு 13.04.1963 இறப்பு 01.04.2014



வடிவேலு புவனேந்திரராசா (ரஞ்சன்)
(சாஸ்திரியார்) குழந்தையேசு கோவிலடி

மணற்குடியிருப்பு முல்லைத்தீவை பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரம் இரணைப்பாலையை வதிவிடமாகவும் கொண்ட வடிவேலு புவனேந்திரராசா காலமானார்.

அன்னார் வடிவேலு, (காலஞ்சென்ற) மீனாட்சியின் அன்பு மகனும், சரோவின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (ரமணன்), கஜேந்தினி (ரம்சா) (பிரதேச செயலகம் வவுனியா வடக்கு), கஜனி (ரதிபா) (2013 வர்த்தகப்பிரிவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் நல்லடக்க நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலியை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். நாளை சனிக்கிழமை (2014 .04.05) நடைபெறவிருக்கும் 5 ஆம் நாள் செலவு நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

5-ம் வட்டாரம், இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு.
தகவல்: குடும்பத்தினர்
(சி-6462)



## மூளாய் - வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

### வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

சித்திவிநாயகப் பெருமான் அடியார்களே!
நிகழும் விஜய வருஷம் பங்குனி 21-ம் நாள் 04.04.2014 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 13 நாட்கள் திருவிழா நடைபெற எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார்.

### உற்சவ விபரம்

| | |
|---|---|
| 03.04.2014 வியாழக்கிழமை | பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம் |
| 04.04.2014 வெள்ளிக்கிழமை | காலை 9 மணிக்கு கொடியேற்றம் |
| 08.04.2014 செவ்வாய்க்கிழமை | மாலை 8 மணிக்கு சப்பறம் |
| 09.04.2014 புதன்கிழமை | மாலை 8 மணிக்கு மஞ்சம் |
| 14.04.2014 திங்கட்கிழமை | ஜய வருடம் சித்திரை 1-ம் திகதி தேர்த்திருவிழா காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூஜை |
| 15.04.2014 செவ்வாய்க்கிழமை | தீர்த்த உற்சவம் மாலை 6 மணிக்கு ஊஞ்சல், கொடியிறக்கம் |
| 16.04.2014 புதன்கிழமை | மாலை 4 மணிக்கு பூங்காவனத் திருவிழா |
| 22.04.2014 செவ்வாய்க்கிழமை | மாலை 4 மணிக்கு வைரவர் பொங்கல் |

தினமும் மாலை 6.30 மணிமுதல் 7 மணிவரை தெய்வீக சொற்பொழிவும் 7 மணிமுதல் 7.45 மணிவரை தெய்வீக இசையரங்கும் இடம்பெறும்.


மூளாய், சுழிபுரம். (6062) பரிபாலன சபையும் திருவிழா உபயகாரர்களும்

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல.475 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்
(வண்ணார் பண்ணை சிவன்கோவிலடி)
A/L 2016
தொழில்நுட்பப் பிரிவு
2வது அணி ஆரம்பமாகின்றது
05.04.2014
சனிக்கிழமை
காலை 8.30 மணிக்கு
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
அலுவலக நேரம் :
கிழமை நாட்களில் பி.ப 2.00 - 6.00
சனி, ஞாயிறு தினங்களில் காலை 7.00 - மாலை 6.00
குறிப்பு : அனுமதிகள் மட்டுப்படுத்தப்படுள்ளன.
(6064)
A/L தொழில்நுட்பப் பிரிவிற்கு
தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

வீடு விற்பனைக்கு
இரண்டு பரப்புக்காணியில் அமைந்த வீடு சுண்டுக்குளிப் பகுதியில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776181216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருக்கு கல்வியங்காட்டில் சிலை அமைப்பு



(மானிப்பாய்)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 6 அடி உயரமுள்ள உருவச்சிலை யாழ்.கோப்பாயைச் சேர்ந்த யாழ்.எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் இ.சுந்தர லிங்கம் என்பவரின் 3 இலட்சம் ரூபா நிதியில் யாழ்.கல்வியங்காட்டு சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட சிலையின் பெயர்ப்பலகையை நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா திரை செய்து வைத்தார்.

இந்த உருவச் சிலை திறந்துவைக்கப்பட்டதை தொடர்ந்து வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பொது மக்களுக்கு உடு புடவைகளும் வழங்க ப்பட்டன.

இந்நிகழ்வில் எம்.ஜி.ஆர் ரசிகர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (23)

# அபிப்பிராயங்களை தெரிவிக்கலாம்

பாசையூர் புனித அந்தோனியார் கிராமிய கடற்றொழில் அமைப்பின் வேண்டுகோளுக்கமைவாக இச்சங்கத்தின் தலைவர் அமரர் மிக்கோர் சிங்கம் தவப்பிரகாசத்தின் இறுதி நிகழ்வின் போது பாரம்பரிய கைத் தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பிற்கமைய, பாசையூர் இறங்கு துறையிலிருந்து பெறப்பட்ட மணலைக் கொண்டு நிரப்பப்பட்ட பிரதேசத்திற்கு தவப்பிரகாசம் முற்றம் என பெயர் சூட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பொது மக்களின் அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான பொது மக்களின் கருத்துக்கள்/ அபிப்பிராயங்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் முதல்வர் யாழ். மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாநகரசபை முதல்வர், திருமதி.யோ.பற்குணராசா அறிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதிக்குள் பொது மக்களின் அபிப்பிராயம் எதுவும் கிடைக்கப்பெறாதவிடத்து இதனை மக்கள் ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# பரீட்சை நிலையம் இடமாற்றம்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் அடிப்படைச் சிங்கள, அடிப்படைத் தமிழ் சான்றிதழ் கற்கைநெறி 2014/2015 கல்வியாண்டுக்கான தரப்படுத்தல் பரீட்சை மற்றும் முகாமைத்துவ பட்டக்கற்கைநெறி என்பன நாளை சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும், முகாமைத்துவப்பட்டக்கற்கை நெறி 2014/2015 கல்வியாண்டுக்கான தேர்வுப்பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

இதேவேளை கிளிநொச்சி கற்கை நிலையத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு கிளி/சென்.தெரேசா மகளிர் கல்லூரியில் மேற்படி பரீட்சைகள் நடைபெறும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடத்த திட்டமிட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தால் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன. (2)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

AMDA நிறுவனம், பாணந்துறை லயன்ஸ் கழகம், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் பொது மருத்துவ சேவை, பல் மருத்துவ சேவை, நீரிழிவு நோய்க்கான பரிசோதனை, ஆய்வுகூட சேவை, கண் பரிசோதனை, இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு இலவச கொப்பிகள் வழங்கல் ஆகியன இடம்பெறும்.

இம்முகாமிற்கு கொழும்பு மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலிருந்து மருத்துவக் குழுவினர் வருகை தருவர்.

இம்மருத்துவ முகாமில் பொதுமக்கள் அனைவரையும் பங்குபற்றி பயனடையுமாறு யழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிப்பாளர் கேட்டுள்ளார். (2)

# பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைக்கு கீழ் பணியாற்றுவர்

## வடக்குமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைகளுக்கு கீழ் பணிபுரியும் அதேவேளை சுகாதார திணைக்களத்தினால் சம்பளம் வழங்கப்பட வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் பி.சத்தியலிங்கம் ஆகியோரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச, நகர சபைகளின் தவிசாளர் 10 பேர் பங்கு கொண்டிருந்தனர். அதேவேளை வடக்கு மாகாணத்தின் ஆளும்கட்சி உறுப்பினரான பா.கஜதீபனும் பங்கு கொண்டிருந்தார்.

வலிகாமம் வடக்கு, நல்லூர், வலி.தென் மேற்கு, கரைச்சி ஆகிய பிரதேசசபைகளில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதார வைத்திய அதிகாரியின் கீழ் உள்வாங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச சபைகளினால் பணிப்புறக்கணிப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் நேற்று முன்தினம் முதலமைச்சர மற்றும் சுகாதார அமைச்சரினால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதேச சபைகளிலுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கான ஆளணியை இன்னும் 6 மாதங்களுக்குள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அதுவரையில் மேற்படி பிரதேச சபைகளின் கீழ் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் பணிபுரிவார்கள் எனவும் அவர்களுககாக மாதாந்த சம்பளத்தை சுகாதார திணைக்களம் வழங்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சுகாதார வைத்திய அதிகாரிகளை முதலமைச்சரும், சுகாதார அமைச்சரும் சந்தித்து மேற்படி விவகாரம் குறித்து கலந்துரையாடினர். (2-6)

# குருசடித் தீவில் அந்தோனியாருக்கு திருவிழா

நாவாந்துறை-குருசடித்தீவு தூய அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்சிலுவைப்பாதை தியானத்துடன் திருப்பலியும் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா திருப்பலிக்காக அன்றையதினம் காலை 5.30 மணியிலிருந்து பண்ணை வீதியிலிருந்து படகுச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக பா.பி.இராஜசிங்கம் அடிகளார் அறிவித்துள்ளார். (2)

# மரக்கறிவிலைகள் வீழ்ச்சி

யாழ்.குடா நாட்டில் மரக்கறி வகைகளின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதிலும் கரட்டின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.

கடந்த தினங்களாக கரட்டின் விலை 70 ரூபா முதல் 80 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது 50ரூபா முதல் 60 ரூபா வரையில் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் அதிகளவான கரட் சந்தைப்படுத்துவதன் மூலமே இந்த திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது என சந்தை வியாபாரிகளால் தெரிவிக்கப்படுகிறது. (2-23)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 100 |
| தக்காளி | 30 | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 40 | 40 |
| கரட் | 80 | 60 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 50-60 | 80 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 40 | 50 | 60 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 | 80 |
| கறிமிளகாய் | 80 | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 150 | 240 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 70 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 70 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 70 | 100 | 100 | 80 |

# இராசி பலன்

04.04.2014
(பங்குனி 21, வெள்ளிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 11.55 மணிவரை
ரோகினி பின்னிரவு 4.35 மணிவரை
இராகுகாலம் 10.40-12.10 மணிவரை
சுபநேரம் 6.10-07.40 மணிவரை

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**இடபம்** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், எந்தவொரு வேலையையும் நாளை யென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** காரிய அலைச்சல்கள் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், யாராவது உதவிகள் கேட்டு வரலாம், பிதா சிந்தையுண்டு.

**கடகம்** தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப்பெறுவீர்கள், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**சிங்கம்** முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், உற்சாகத்துடன் பணிபுரிந்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், வீண்பயமுண்டு.

**துலாம்** வழிபாட்டால் சிறப்பினை காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம்.

**விருச்சிகம்** வெளியூர் தொடர்புகள் நன்மை தரும், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**மகரம்** செய்தொழிலில் மேன்மையுண்டு, மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களுக்கு செலவுகள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், அந்நியர் சந்திப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம் பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.


இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் இடம் பெற்றுள்ளது.




இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கி சென்ற தனியார் போக்குவரத்துக்குச் சொந்தமான மினிபஸ் ஒன்றும் கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து சம்பவத்தில் வை.மயூரன் (வயது-34) என்பவரே தலையிலும் கையிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (2-29)




நன்றி: அததெரண

# வியாபார பாதிப்புக்களை தடுக்கக்கோரி நேற்று உண்ணாவிரதம் அனுஷ்டிப்பு

யாழ்.வர்த்தகர்களுக்கு மாவட்டத்திற்கு வெளியிலிருந்து வரும் தற்காலிக வியாபாரிகளினால் ஏற்படும் வியாபாரப் பாதிப்புக்களைத் தடுக்குமாறு கோரிக்கை விடுத்து தமிழ் தேசிய பண்பாட்டுப்பேரவையின் ஏற்பாட்டில யாழ்ப்பாணத்தில் உண்ணா விரதப் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9.30 மணியள வில் யாழ்.வீரசிங்கம் மண்டபம் முன்பாக 4 ஆவது உலகத்தமிழராட்சி நினைவிடத்திற்கு அருகாமையில் இந்த உண்ணாவிரதப்போராட்டம் இடம்பெற்றது.

இதில் யாழ்.வணி கர் கழகத்தலைவர் இ.ஜெயசேகரம் உள்ளிட்ட வர்த்தகர்கள் மற்றும் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்களும், தமிழ்த் தேசியப்பண்பாட்டு பேரவையின் தலைவரும் முன்னாள் யாழ்.மாநகரசபையின் உறுப்பினருமான சுவீகரன் நிஷாந்தன் உள்ளிட்ட அந்த அமைப்பினரும் பங்கு கொண்டிருந்தனர். இவ்விடயம் குறித்து தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.




யாழ்ப்பாண வர்த்தகர்களின் நலன்கருதி தமிழ்த்தேசிய பண்பாட்டுப் பேரவையினரும் வர்த்தகர்களும் இணைந்து நடாத்தும் உண்ணாவிரதப்போராட்டத்தில் கலந்து கொண்டு எமது யாழ்ப்பாண வர்த்தகர்களிற்கு நியாயமான தீர்வைப்பெற்றுக்கொடுக்க அனைவரும் முன்வரவேண்டும்.

அண்மைக்காலத்தில் வர்த்தக ரீதியில் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்து நிற்கும் யாழ்.வர்த்தகர்கள் மீது மாவட்டத்திற்கு வெளியிலிருந்து வரும் தற்காலிக வியாபாரிகளினால் ஏற்படும் வியாபாரப் பாதிப்புக்கள் தொடர்பிலும். அதனால் அவர்கள் சந்தித்து வரும் நெருக்கடி நிலைகளையும் அனைவரும் நன்கு அறிந்திருக்கின்றோம். தற்போதைய நிலையில் யாழ்.வர்த்தகர்களினால் தங்களது மின்சாரக் கட்டணம், இதர வரிகளைக்கூட செலுத்த முடியாத நிலையில் துயரங்களைச்சுமந்து கொண்டிருக்கின்றார்கள்.

பல வியாபார உரிமையாளர்கள் தங்கள் ஊழியர்களுக்கு தொடர்ச்சியாக சம்பளம் வழங்க முடியாமையினால் வேலையிலிருந்து நிறுத்தும் அளவிற்கு யாழ்.வர்த்தக நிலையங்கள் இருக்கின்றன. இதனால் வட்டிக்குப்பணம் பெற்று தொழிலை தொடங்கி நடத்தும் வியாபாரிகள் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காமையினால் அந்தப் பணத்தை மீளசெலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் கடைகள் பல மூடப்பட்டும், கைமாற்றம் செய்யப்பட்டுக் கொண்டும் இருக்கின்றன. தற்கொலைகள் கூட நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்தும் ஊழியர்களை வேலையில் இடைநிறுத்துவதனால் இதனை நம்பி நடுத்தர வாழ்வில் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்கள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

இது இப்படி இருக்கையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஒருமாதம் பிற மாவட்டத்தினர் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட யாழ்.கூட்டுறவு நிறுவனத்தினரும் இதற்கு உடந்தையாக இருக்கும் வேறு அதிகாரிகளும் புத்தாண்டு வியாபாரத்திற்கு அனுமதி வழங்கியது யாழ்.வர்த்தகர்களுக்கு மேலும் அவலத்தை ஏற்படுத்துவது போல் தமக்கு வருமானமும் வரிப்பணமும்கிடைத்தால்போதும் என்பதைப்போல் செயற்படுவது குறிப்பாக யாழ்.புடைவை வியாபாரிகளிற்கு பெரும் அதிருப்தியை உருவாக்கியுள்ள தோடு நிச்சயமாக யாழ்.புடைவை வியாபாரி களின் புதுவருட விற்பனையில் வணிக ரீதியில் நேரடித் தாக்கத்தினை உருவாக்கி யுள்ளது.

இது மட்டுமல்லாமல் யாழ்.மாவட்டத்தற்கு உட்பட்ட இடங்களில் வீதியோரங்களில் புடைவைகளை குவித்து விற்பனைசெய்யும் தற்காலிக பிற மாவட்ட, பிற நாட்டு வியாபாரிகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட கூட்டுறவு மற்றும் மாநகரசபை, மாகாணசபை, மாகாண அதிகாரிகளிற்கு யாழ்.வர்த்தகர்கள் சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் தமிழ்த்தேசிய பண்பாட்டு பேரவையினர் கேட்டுக்கொள்வதுடன் உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடுதலான கரிசனையெடுத்து யாழ்.வர்த்தகர்களின் காவலர்களாக செயற்படுவீர்கள் என நாம் நம்புகின்றோம். என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டி ருந்தது.

இதே வேளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உறுதி மொழியினையடுத்து பி.ப 1.30 மணிக்கு உண்ண்ணாவிரதம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (2-6)

# நேபாள நாட்டுக்குழுவினர் யாழிற்கு நேற்று வருகை

## பல்வேறு தரப்பினரையும் சந்தித்தனர்



நேபாள நாட்டின் அமைதி மற்றும் புனரமைப்பு அமைச்சின் 10 பேர் கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தை மாவட்ட செயலகத்தில் காலை 9.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினர்.

அமைதி மற்றும் புனரமைப்பு அமைச்சின் கீழுள்ள குழுவினரின் ஆய்வுப் பயணத்தின் ஓர் பகுதி என்பதால் யாழ். மாவட்டத்தின் மீள்கட்டுமானம், மீள்குடியேற்றம், வாழ்வாதாரம், விவசாயம், வீதி அபிவிருத்தி, கைத்தொழில்அபிவிருத்தி மற்றும் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வடக்கின் வசந்தம், வாழ்வின் எழுச்சி போன்ற பல்வேறு திட்டங்கள் தொடர்பிலும் அவர்கள் கேட்டறிந்து கொண்டதாக மேலதிக அரசாங்க அதிபர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார்.

இதேவேளை இந்தக்குழுவினர் யாழ்போதனா வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிரா ஜாவை சந்தித்து கலந்துரையாடினர்.

காலை 10மணியளவில் இச்சந்திப்பு இடம் பெற்றது. இதனையடுத்து யாழ். பொது நூலகத்திற்கும் இந்தக் குழுவினர் சென்று பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இக்குழுவினர் வட மாகாண ஆளுநர் மேஜர்ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை அவ ரது பணிமனையில் வைத்து சந்தித்தனர். (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி நிறுவனங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

நிதி நிறுவனங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வுள்ளது. அண்மைக் காலமாக நிதி நிறுவனங்கள் மீதான கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக நிதி நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் மத்துகம பிரதேச த்தில் 50 இலட்ச ரூபா பணம் கொள்ளையிடப்பட்டிருந்தது. இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப் பட்டதுடன் அவர்களிடமிருந்து நாறபத்து இரண்டு இலட்ச ரூபா பணம் மீட்கப்பட்டிருந்தது.

எதிர்காலத்தில் வங்கிகள் மற்றும நிதி நிறுவனங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதனை தடுப்பதற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிதி நிறுவனங்களுக்கு அருகாமையில் சிவில் உடையில் நிலைநிறுத்தப்படவுள்ளனர்.

இதன்மூலம் கொள்ளைச் சம்பவங்களை தடுக்க முடியும் என பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். அண்மைக் காலங்களில் ஒன்பது நிதி நிறுவனக் கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)


## கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

### பதவி வெற்றிடங்கள்

கீழ் குறிப்பிடும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது தபால்மூலம் பெறுவதாயின் சுய முகவரி எழுதப்பட்ட 10 ரூபா முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபால் உறையை அனுப்பிப் பெற்று 21.04.2014 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம்.

01. பதவி: தட்டெழுத்தாளர்- வெற்றிடம்-01
சம்பளக் குறியீட்டு இலக்கம்: 305/15
சம்பள அளவுத் திட்டம்: 9450.00, 75.00X 10, 80.00X 10-11000.00
வயதெல்லை:- 18-45
தகைமைகள்:- க.பொ.த. (சாதாரண தரம்) தொடர்புபட்ட மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியும் சிங்களம் அல்லது தமிழ் தட்டெழுத்து வேகம் நிமிடத்திற்கு 20 சொற்களுடன் ஆங்கிலத் தட்டெழுத்து நிமிடத்திற்கு 30 சொற்கள். *கணனி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

02. பதவி:- விற்பனை உதவியாளர்- வெற்றிடம்-02
சம்பளக் குறியீட்டு இலக்கம்:- 308/17
சம்பள அளவுத் திட்டம்:- 8950.00,65.00X 10,70.00X 10-10300.00
வயதெல்லை:- 18-45
தகைமைகள்:- (அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்
அல்லது
(ஆ) 8 ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (3) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

03. பதவி :- சாரதி- வெற்றிடம் -01
சம்பள குறியீட்டு இலக்கம்:- 312/15
சம்பள அளவுத் திட்டம்:- 9450.00,75.00X10,80.00X10- 11000.00
வயதெல்லை:- 18-45
தகைமைகள்:- (அ) 8 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் உழவியந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம்.

குறிப்பு:-
அ) கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்பங்களை பணிபுரியும் சங்கங்களினூடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
ஆ) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
இ) தெரிவு செய்யப்படுபவர்கள் சங்கத்தால் விதிக்கப்படும் பிணைப்பணத்தை உடன் செலுத்த வேண்டும்.
ஈ) பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிபு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

நெல்லியடி, கரவெட்டி
04.04.2014 (சி-6861) தலைவர்



## யூட் ஆனவருக்கு செபம்

இன்றும் என்றைக்கும் உலகம் முழுவதும் இயேசு பிரானின் புனித இதயம் போற்றப்பட்டும் ஏற்றப்பட்டும் நேசிக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் இயேசு பிரானின் புனித இதயம் இரக்கம் கொள்ளட்டும்.

திக்கற்றவர்களுக்கு உதவுவரான புனித யூட் ஆண்டவரே எமக்காக வேண்டிக் கொள்ளும். (6056) அடியாள்



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 32 செவ் 7 இல்<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: BIT / பொறியியலாளர் (நியூசிலாந்து)<br>தொ.இ: B/1191 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 75 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 150 cm<br>தகைமை/தொழில்: BA / சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளசமூக உத்தியோகத்தர்<br>தொ.இ: G/1757 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: 72 செவ் 12 இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்: O/L / தனியார் நிறுவன வேலை<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண், விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/1193 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 28.5 செவ் 2 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: MBBS / Dr.எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/1758 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 14.25 செவ் 2 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த தொழில் (பிரான்ஸ் - Work Permit)<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/1195 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 55 செவ் 7 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: A/L / தாதி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/1759 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 10.75 உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: A/L (UK – PR)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/1196 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 37 செவ் 2 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: BSMS<br>தொ.இ: G/1764 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சிப் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்வு



(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக அபிவிருத்திக் குழுவின் மீளாய்வுக் கூட்டத்தில் வீட்டுத்திட்டம், முன்பள்ளிகளில் இராணுவத் தலையீடு, அபிவிருத்திகள், சுகாதாரம், வாழ்வாதாரம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

பிரதேச செயலக அபிவிருத்திக் குழுவின் மீளாய்வுக் குழுக் கூட்டம் நேற்றுக்காலை 9 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் கரைச்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான மு.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் நா.வை. குகராஜா, வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் உட்பட ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் எனப் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கரைச்சிப் பிரதேச சபையின் அபிவிருத்திகள் பற்றிய குறைபாடுகளை சில அமைப்புக்கள் சுட்டிக்காட்டியபோது பிரதேச சபையின் நிதி வளத்திற்கேற்பவே சபையின் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுவதாக தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு பிரதேச செயலகத்தின் அனுமதியுடனேயே அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட வேண்டுமென்றும் தன்னிச்சையாக செயற்படுவதை நிறுத்துமாறும் சந்திரகுமாரினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்தோடு முன்பள்ளிகள் சி.எஸ்.டி மூலம் நடத்தப்படுவதற்கும் தனக்கும் எவ்வித உடன்பாடும் இல்லையென தெரிவித்த சந்திரகுமார், வடக்கு மாகாணத்திற்கென தனியான பாடத்திட்ட அமைப்பு உள்ளதனால் அதன்படியே முன்பள்ளிகள் நடத்தப்பட வேண்டுமெனவும் இதற்கான உரிமை வட மாகாண சபைக்கேயுள்ளதனால் அவர்களே இவற்றை நடைமுறைப்படுத்த அமைப்புக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

அத்துடன் தற்போது பல இடங்களிலும் கசிப்பு விற்பனை பரவலாகக் காணப்படுவதாகவும் அதனை கட்டுப்படுத்த பொலிஸாரே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் பொது அமைப்புக்களால் வலியுறுத்தப்பட்டது.



இதற்கு பதிலளித்த பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் இவற்றை தடுக்க பொதுமக்களும் அமைப்புக்களும் மதுவரித்திணைக்களத்தினரும் தமக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் சட்டவிரோத மணல் அகழ்வினை தடுக்கவும் இவர்களே ஒத்துழைக்க வேண்டும்எனவும் கூறினார். வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளுக்கு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி கருத்து தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கென தற்போது புதிய அம்புலன்ஸ் வண்டிகள் பாவனைக்காக விடப்பட்டுள்ளதாகவும் வைத்திய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 23 வைத்தியர்கள் மேலும் இணைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே பணியிலுள்ள 51 வைத்தியர்களோடு இவர்களும் இணைக்கப்படுவதன் மூலம் கிராமப்புறங்களிலுள்ள வைத்தியசாலைகளின் சேவைகளும் விஸ்தரிக்கப்படும் என்று விளக்கமளித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணி உரிமைப்பத்திரமின்றியுள்ளவர்களுக்கு அவற்றை பெற்றுக் கொடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் இது வரை வீட்டுத்திட்டம் கிடைக்கப் பெறாதவர்களுக்கு 2 மாதங்களில் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் சந்திரகுமாரால் தெரிவிக்கப்பட்டது. (9-254)

## சகபாடி ஆதரவுக்குழு கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான சகபாடி ஆதரவுக் குழு கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலக முதனிலை மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவ தாஸின் வழிகாட்டலில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நா.மணிக்கவாசகம், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆ.சுபாஸ்கரன் ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர். (9-266)




## அரச ஓய்வூதியர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் தெரிவு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட அரசசேவை ஓய்வூதியர் சங்கத்தின் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதன்படி சங்கத்தின் தலைவராக அ.கனகரத்தினம், செயலாளராக திருமதி நா.யோகராணி, பொருளாளராக மு.சிவஞானசுந்தரமூர்த்தி, உப தலைவராக பொன்.தில்லைநாதன், உப செயலாளராக எஸ்.இராஜரட்ணம், கணக்கு பரிசோதகராக கி.சந்திரராஜா, நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.பெருமாள், மிக்சலி பிரான்ஸிஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (9-84)

## வாய்ச்சுகாதாரம் குறித்து கருத்தமர்வு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 94 பாடசாலைகளிலும் தரம்-1 இல் கல்வி பயிலும் மூவாயிரம் மாணவர்களின் வாய்ச்சுகாதாரத்தை பேணும் நோக்கோடு அவர்கள் எல்லோருக்கும் பற்பசையும் பற்தூரிகையும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அறக்கட்டளை கல்வி நிதியத்தினால் பாட சாலை நிர்வாகங்களூடாகவே இவை கையளிக்கப்பட்டுள்ளன.

வாய்ச்சுகாதாரம் மற்றும் சுகாதாரத்தை கடைப்பிடித்தல் தொடர்பான கருத்தமர்வு மேற்குறித்த 94 பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு கிளி.மாவட்ட சுகாதார பணிமனையில் முதலில் நடத்தப்பட்டது.

மாணவர்களிடம் பற்தூரிகை, பற்பசை என்பன கையளிக்கப்பட்ட பின்னர் தற்போது கிளிநொச்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசலிங்கம் அம்மாணவர்களோடு வாய்ச்சுகாதாரம் பேணுதல் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார். (9-84)

## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோருக்கு அபராதம்

(முல்லைத்தீவு)

மாங்குளம் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட பதினொரு டிப்பர் வாகன சாரதிகளுக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்துமாறு முல்லைத்தீவு நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் புதன்கிழமை மாங்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அகழப்பட்ட மண்ணை 11 டிப்பர் வாகனங்களில் ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்ட வேளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது வாகனங்கள் கைப்பற்றப்பட்டதோடு சாரதிகளும் பிடிபட்டனர்.

இந்நிலையில், நேற்றைய தினம் குறித்த 11 சாரதிகளும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த 11 சாரதிகளுக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததோடு, மணலையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட மணலை நீதியமைச்சின் அனுமதியுடன் முல்லைத்தீவிலுள்ள இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டு தலங்களுக்கு சலுகை விலையில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பதிவாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (9)

## ஓடுகளுடன் வந்த பாரவூர்தி தம்பிராயில் தடம்புரண்டது



(பூநகரி)

கொழும்பிலிருந்து பூநகரி நோக்கி ஓடுகள் ஏற்றி வந்த பாரவூர்தி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் பூநகரி-பரந்தன் வீதியிலுள்ள தம்பிராய் சந்தி பாலத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மெலும் தெரிய வருவதாவது,

கொழும்பிலிருந்து பூநகரி நோக்கி 10 ஆயிரம் ஓடுகளை ஏற்றிக் கொண்டு வந்த இப்பாரவூர்தி பூநகரி-பரந்தன் வீதியின் தம்பிராய் சந்தி பாலத்திற்கு அருகாமையில் தடம்புரண்டு சுமார் 5 அடி ஆழமான பள்ளத்தினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இதில் சாரதி சிறுகாயங்களுக்குட்பட்டதுடன் உதவியாளருக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை.

எனினும் பாரவூர்தியின் முன்பக்கம் பாரிய சேதமடைந்துள்ளதோடு ஏற்றி வரப்பட்ட ஓடுகள் அனைத்தும் சேதமடைந்துள்ளதாக ஓடுகளை கொள்வனவு செய்த வர்த்தக உரிமையாளர் தெரிவித்தார். (9-84)

## வவுனியா பாடசாலைகளில் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவங்கள் காவலாளிகள் இல்லாத பாடசாலைகளிலேயே இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் வவுனியா தாண்டிக்குளம், பன்றிக்கெய்தகுளம், காத்தார் சின்னக்குளம் போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளில் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

மேற்குறித்த பாடசாலைகளில் மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக உலக உணவுத் திட்டத்தினால் கொடுக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களே அதிகளவில் திருடப்பட்டுள்ளன.

அத்தோடு தாண்டிக்குளம் பாடசாலையில் கணனி அறை உடைக்கப்பட்டு பொருட்களும் திருடப்பட்டுள்ளன. (9-266)

## பூநகரி கோட்டமட்ட தமிழ்த்தின விழா

(பூநகரி)

பூநகரி கோட்டமட்ட தமிழ் மொழித்தின விழா பூநகரி மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.எஸ்.இதயராஜ், சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வி.சொக்கநாதன், கிளிநொச்சி வலய நிர்வாக உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தேவகுமார், பூநகரி பிரதேச சபை தவிசாளர் பொ.ஸ்ரீஸ்கந்தராஜா, பூநகரி வைத்திய அதிகாரி ப.கோகுலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (9-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக காங்கிரஸ்காரர்களுக்கு தமிழருவி மணியனின் திறந்தமடல்



**தமிழருவி மணியன்**

காலம் முழுவதும் கொடிகள் கட்டியும், சுவரொட்டி ஒட்டியும், மேடை போட்டும், கோஷங்கள் இட்டும் களைத்துப் போய் விட்ட என் அப்பாவி காங்கிரஸ் தொண்டர்களுக்கு... வணக்கம்!

கர்த்தர்தன்னுடைய சீடர்களுக்குக் கதைகள் சொல்லி உண்மையை விளக்கினார். பரமஹம்சர் கதைகளின் மூலமே பரம்பொருள் தத்துவத்தை எளிதாக உணர்த்தினார். நானும் முதலில் உங்களுக்கு ஒரு கதை சொல்ல முயல்கிறேன்.


ஒரு நாட்டில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஓர் அந்தரங்க ஊழியன் பக்கத்திலிருந்து பணிவிடைகள் செய்து வந்தான். சில நாட்களாக அரசன் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்திருப்பதைக் கண்டு, அதற்கான காரணம் கேட்டான் அந்த உண்மை ஊழியன். "சகல சாமுத்திரிகா இலட்சணங்கள் பொருந்திய ஓர் இளைஞனின் அழகான முகத்தில் அன்றாடம் நான் விழித்தெழுந்தால், வெற்றி மேல் வெற்றி பெற்று உலகம் முழுவதையும் ஆள முடியும் என்று ஒரு முனிவர் என்னிடம் மொழிந்தார். திசைகள் அனைத்திலும் ஆளனுப்பிப் பார்த்துவிட்டேன். அப்படியோர்இளைஞனை இன்றுவரை கண்டுபிடிக்க இயலவில்லை. இதுதான் என் கவலைக்குரிய காரணம்' என்றான் அரசன்.

"இதறகாகவா வருத்தப்படுகிறீர்கள்? கவலையை விடுங்கள். நாளை காலை நீங்கள் எதிர்பார்க்கும் பூரண இலட்சணங்கள் பொருந்திய பிள்ளையை உங்கள் பார்வையில் கொண்டு வந்து நிறுத்துகிறேன்' என்று வாக்குறுதி வழங்கிவிட்டு அந்த ஊழியன் அகன்றான். மறுநாள் வைகறை புலர்ந்தது. அரசன் ஆர்வத்துடன் விழித்தெழுந்தான். அரைப் பார்வையும் ஒழுகிய மூக்குமாய் ஒரு பையனை அழைத்து வந்தான் ஊழியன். "யார் இவன்?' என்றான் அரசன ஆத்திரத்துடன். "அரசே! இவன் நான் பெற்றெடுத்த பிள்ளை. இநதப் பூவுலகில் சகல சாமுத்திரிகா இலட்சணங்கள் நிறைந்தவன் என எனக்குத் தெரிய வேறு யாரும் என் பையனைப் போல் இல்லை' என்றான் அந்தரங்க ஊழியன்.


நம் காங்கிரஸ்தலைவர்களுககும் அந்த ஊழியனுக்கும் எந்த வேற்றுமையும் இல்லை என்பதுதான் உண்மை. 1984 முதல 2009 முடிய நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் சிவகங்கை தொகுதியில் வேட்பாளராக நின்ற ப.சிதம்பரம் பார்த்த பதவிகள் போதும் என்பது போன்ற ஓர் துறவு நிலையில் நின்று, காந்தியப் பாதையில் நலிவுற்ற மக்களுக்கான நிவாரணப் பணியில் ஈடுபட முடிவெடுத்துவிட்டார். "சொர்க்கபுரியாய்' தான் உருவாக் கிய தொகுதியைப் பழுதின்றிப் பராமரிக்க யார் தகுதி மிக்க இளைஞர் என்று சிந்தித்த சிதம்பரம் கண்டெடுத்த வேட்பாளர்தான் கார்த்தி சிதம்பரம். 'Charity begins at home(மண்பதை அன்பு வீட்டிலிருந்தே வெளிப்படுகிறது) என்பதை அறியாதவரா நம் அறிவார்ந்த நிதியமைச்சர்!


வாரிசு அரசியல் என்ற நோய் நாடு முழுவதும் பரவுவதற்கு வாசற் கதவை முதலில் திறந்து வைத் தது நேரு குடும்பம்தான் என்பது வரலாறு. காங்கிரஸ் வீழ்ச்சிக்கு மூல முழு முதற்காரணம் இந்த வாரிசு அரசியல்தான். உங்கள் தந்தை முன்னாள் மந்திரியா கவோ, தலைவராகவோ அல் லது எம்.பி.யாகவோ இருந்தது இலலையா... அப்படியானால்உங்களுக்குக் காங்கிரஸில் எதிர்காலமே இல்லை என்பது போல் மகாத்மா காந்திக்கு ஜே!' என்று தொடர்ந்து தொண்டைவற்றக் குரல் கொடுக்க வேண்டியது தான். பாவம் நீங்கள்!


மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி, சஞ்சய் காந்தி, ராஜீவ்காந்தி, சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி என்று ஒரேயொரு குடும்பத்தின் ஆதிக்கம் தொடர்வது எந்தவகை ஜனநாயகம்? 125 ஆண்டுகளுக்கு மேல் இந்திய சமூகத்தின் பிரிக்க முடியாத அஙகமாகிவிட்ட காங்கிரஸ் ஒரேயொரு குடும்பத்திடம் அடகு வைக்கப்பட்டதனால்தான் இன்று அது மரணப் படுக்கையில் கண்



மூடிக் கிடக்கிறது என்பதை உங்களால் உணர முடியவில்லையா? இந்தியாவின் 120 கோடி மக்களின் விதியெழுதும் வல்லமை நேரு குடும்பத்துக்கு மட்டும்தான் உண்டு என்ற அடிமை மனோபாவத்திலிருந்து நீங்கள் விட்டு விடுதலையாகப் போவதே இல்லையா?







காங்கிரஸ் தேசிய அளவில் எப்படி வளர்ந்தது என்று யோசியுங்கள். அதனுடைய வளர்ச்சிக்கு நான்கு முக்கிய காரணிகள் அடித்தளமாய் இருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விட்டீர்கள். விடுதலை வேள்வியில் ஈடுபட்டு, சொந்த சுகங்களைத் தியாகம் செய்த தலைவர்கள் தேடிக்கொடுத்த நற்பெயர், நாடு முழுவதும் கடைசி கிராமம் வரை இந்த இயக்கம் வளர்வதற்கு, வேர்வரை வியர்வைநீர்பாய்ச்சிய தொண்டர்களின் உழைப்பு, மாநிலங்களின் உணர்வுகளுக்கு உட்பட்டு, தேசியத்தைக் கட்டிக் காத்த தலைவர்களின் அரசியல் தெளிவு, அரசியலைத் தொழிலாகவும், பிழைப்பாகவும் பாவிக்காத பண்பு நலன் ஆகியவற்றால் வளர்ந்த காங்கிரஸின் இன் றைய நிலை என்னவென்று சிந்தியுங்கள்.

நம் தமிழகத்தை மட்டும் இப்போது கணக்கில் எடுத்துக் கொளவோம். இன்றுள்ள தமிழகத்தின் பழைய காங்கிரஸ் தலைவர்களில் காமராஜர் யார்? கக்கன் யார்? இவர்களது எளிய வாழ்க்கைக்கும் இன்றைய காங்கிரஸ் தலைவர்களது வாழ்க்கைக்கும் எள்ளளவும் சம்பந்தமுண்டா? ராஜாஜியைப் போன்ற கூர்த்த மதியும், அப்பழுக்கற்ற துறவு வாழ்க்கையும் ஒருங்கிணைந்த ஒரேயொரு தலைவரையாவது இன்றைய தமிழ்நாடு காங்கிரஸில் இனங் காட்ட முடியுமா? சீரிய சிந்தனையாளர்கள், சிறந்த எழுத்தாளர்கள், நேரிய பேச்சாளர்கள், அகத்திலும் புறத்திலும் அழுக்குப் படியாத ஒழுக்க சீலர்கள், பதவிப் பித்தற்றவர்கள், பணத்தின் மீது ஆசை துறந்தவர்கள், தொண்டு செய்வதே வாழ்வின் தவம் என்று எளிய மக்களின் நலன் நாடுபவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் தமிழ்நாடு காங்கிரஸில்? விரல் நீட்டி காட்ட முடி யுமா உங்களால்?

"உங்களுக்கு ஒழுங்காகப் பேசத் தெரியுமா? அழகாக எழுத வருமா? சுயமாகச் சிந்திப்பவரா? மக்களோடு நெருக்கமான தொடர்பு உள்ளவரா?" ஆம் எனில், நீங்கள் தமிழ்நாடு காங்கிரஸின் தலைவராக ஆவதற்கு வாய்ப்பில்லை. சத்திய மூர்த்தி பவனில் அமர்ந்தபடி அறிக்கையளிப்பதும், ஊடகங்களுக்குப் பேட்டி கொடுப்பதும் தான் காங்கிரஸ் தலைவருக்கான கடமைகள். "அன்னை சோனியாவின் வழிகாட்டுதலின்படி' என்ற வார்த்தைகள் அறிக்கைகளிலும், பேட்டிகளிலும் தவறாமல் இடம் பெறுவது அவசியம். அவ்வளவுதான் கட்சிப் பணி. தேர்தல் நேரத்தில் பத்துப் பேர் நாடாளுமன்றம் செல்லவும், அதில் மூன்று பேர் அமைச்சர் பீடத்தில் அமரவும் தோள் கொடுப்பதற்கு இருக்கவே இருக்கின்றன இரண்டு திராவிட கட்சிகள். சட்டமன்றம் செல்ல வேண்டுமா? அதற்கு நிரந்தரமாக நாற்பது பேர் பட்டியல் தயார். ஒருமுறை போயஸ் தோட்டம், மறுமுறை கோபாலபுரம் என்று காவடி எடுத்தால் போதும். எல்லாம் நினைத்தபடி நடக்கும். நேற்றுவரை இது நிஜம். ஆனால், இன்று? ஆடிய ஆட்டமும், பாடிய பாட்டும் பொய் யாய், கனவாய், பழங்கதை யாய்ப் போய்விட்டன.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் வீழ்ந்ததற்கு எத்தனையோ காரணங்கள்உண்டு. அவற்றில்ஒன்றை இப்போது சொல்கிறேன். அ.தி.மு.க-வில் ஒவ்வொரு முறையும் புதிய முகங்கள் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறும். தி.மு.க வில் சில தலைவர்கள் மட்டும் நிரந்தரமாக நின்றாலும் புதியவர்க ளுக்கும் வாய்ப்புண்டு. ஆனால, இந்த இரண்டு கட்சிகளின் தயவில் களம்காணும் காங்கிரஸில் மட்டும் நேற்று வரை புதியவர்களுக்கு இடமே கிடையாது. நான் மாணவர் காங்கிரஸில் இருந்தபோது 1972இல் திண்டுக்கல் இடைத்தே ர்தல் நடைபெற்றது.

அ.தி.மு.க. சந்தித்த முதல் தேர்தல் அது. காமராஜர் என்.எஸ்.வி.சித்தனை வேட்பாளராக அறிவித்தார். எஸ்.ஜி. விநாயகமூர்த்தி தலைமையில் நானும் சென்று பரப்புரையில் ஈடுபட்டேன். (தொடரும்)

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

767



## பொன்னாக்கும் வித்தை

சந்திரன் அவனுடைய பெற்றோருக்கு ஒரே பிள்ளை! அவனுடைய தந்தை ராமராஜன் ஜவுளி வியாபாரம் செய்து வந்தார். வியாபாரத்தில் ஒருமுறை பெரிய நஷ்டம் ஏற்பட, அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் ராமராஜன் இறந்து போனார். அவனுடைய தாய் பார்கவி தங்கள் வீடு, நில புலன்கள் யாவையும் விற்றுக் கடனை அடைத்தாள். அதன்பின் ஒரு குடிசையமைத்து அதில் தன் பிள்ளையுடன் வசிக்கத் தொடங்கினாள். பார்கவி, வயிற்றுப் பிழைப்புக்காகப் பல வீடுகளில் வேலை செய்யத் தொடங்கினாள்.

அந்த நிலையிலும் தன் பிள்ளையை ஒழுங்காக வளர்க்க எண்ணிய அவள் சந்திரனை ஓர் அரசுப் பள்ளியில் சேர்த்தாள். தொடக்கத்தில் சந்திரனும் ஒழுங்காகப் படித்தான். ஆனால் அவன் பெரியவனாகி பதினைந்து பிராயத்தை எட்டியபோது, தங்கள் குடும்பத்தின் ஏழ்மை அவன் மனதை உறுத்த ஆரம்பித்தது. கிராமத்தில் மற்ற பணக்காரர்களைக் காணும் போது, தானும் அவர் களைப் போல் ஆக ஆசைப்பட்டான். ஆனால் பள்ளியில் படித்து முடித்து ஒரு சாதாரண வேலையில் சேர்ந் தால் தன் ஆசை நிறைவேறாது என்றும் உணர்ந்தான்.

ஒருநாள், இரும்பைத் தங்கமாக்க முடியும் என்றும், அந்த ரகசிய வித்தை சாமியார்களுக்குத் தெரியும் என்றும் சிலர் பேசிக் கொண்டு இருப்பதைத் தற்செயலாகக் கேட்ட பின், சந்திரனுக்குப் படிப்பில் ஆர்வம் குன்றிவிட்டது.

தொட்டதெல்லாம் பொன்னாக்கும் வித்தையை உடனே கற்றுக் கொள்ளத் துடித்தான். ஊரில் எந்த சாமி யார் தென்பட்டாலும், அவர்களைச் சுற்றியலைந்து அந்த வித்தையைத் தனக்குக் கற்றுத்தரச் சொல்லி வற்புறுத்தினான்.

ஆனால் அவன் சந்தித்த சாமியார்களில் சிலர் தாங்கள் பொருள் ஆசையை அறவே துறந்து விட்டதனால் பொன்னாக்கும் வித்தையைப் பற்றி தெரியாது என்றனர். ஆனால் சந்திரன் மனம் தளரவில்லை. தொட்டதெல்லாம் பொன்னாக்கும் வித்தை தெரிந்த சாமியார் ஒருவரை என்றாவது சந்திப்போம் என்று உறுதியாக நம்பினான். தன் பிள்ளையின் போக்கைக் கண்டு பதறிப்போன பார்கவி அவனுக்கு அறிவுரை கூறித் திருத்த முயன்று தோல்வியுற்றாள்.


ஒருநாள் இரவு அவனுக்கு உணவு பரிமாறுகையில் பார்கவி, "நீ இப்போதெல்லாம் அடிக்கடி பள்ளிக்கு வருவதில்லை என்று உன் ஆசிரியர் என்னிடம் சொன்னார். நீ பள்ளிக்குச் செல்லாமல் வேறு எங்கே போகிறாய்?" என்று கேட்க, சந்திரன் அவளிடம் உண்மை சொல்ல மறுத்தான். தாயார் அவனை வற்புறுத்தவும், கோபங்கொண்ட சந்திரன் பாதி சாப்பாட்டிலேயே வீட்டை விட்டுச் சென்று விட்டான். கால் போன போக்கில் வெகு நேரம் சுற்றிய பிறகு, களைத்துப் போய் அம்மன் கோயிலை அடைந்து அங்கு சென்று அமர்ந்து ஓய்வெடுக்க ஆரம்பித்தான்.

நடு இரவில் விழித்துக் கொண்டவன், தனக்கருகில் ஒரு சாமியார் பத்மாசனம் போட்டு அமர்ந்து ஏதோ மந்திரம் உச்சரித்துக் கொண்டிருந்ததைக் கண்டான். உடனே அவனுடைய ஆர்வம் மீண்டும் கொழுந்து விட்டெரிய, அவன் அவரை அணுகினான்.

கண் விழித்து அவனை நோக்கிய சாமியார் "உன் பெயர் சந்திரன் தானே!" என்று கேட்டதும் வியப்புற்றான். "சாமி! என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று அவன் ஆவலுடன் கேட்க, அவர், "எனக்கு எல்லா வித்தைகளும் தெரியும். அதனால் உன் பெயரைக் கண்டு பிடிப்பது அவ்வளவு ஒன்றும் சிரமமில்லை!" என்றார்.

"அப்படியானால் உங்களுக்குத் தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் வித்தை தெரியுமா?" என்று சந்திரன் ஆவலுடன் கேட்க, அவர் தெரியுமென்றார்.

உடனே, அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கிய சந்திரன், "சாமி! தயவு செய்து அந்த வித்தையை எனக்குக் கற்றுத் தாருங்கள்!" என்று மிகவும் கெஞ்சினான்........ (தொடரும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

04.2014
04


- 1814 - நெப்போலியன் முதற்தடவையாக முடி துறந்தான்.
- 1850 - இங்கிலாந்தின் கொட்டன்ஹாம் என்ற ஊரின் பெரும் பகுதி தீயில் அழிந்தது.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப் படைகள வேர்ஜினியாவின் ரிச்மண்ட் நகரைக் கைப்பறிய அடுத்த நாள் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கூட்டமைப்பின் தலை நகருக்கு விஜயம் செய்தார்.
- 1866 - ரஷ்யாவின் இரண்டாம் அலெக்சாண்டர் கீவ் நகரில் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பித்தான்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவத்தினர் ஹங்கேரியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.
- 1949 - பன்னிரண்டு நாடுகள் ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் ஒருங்கிணைந்து நேட்டோ அமைப்பை உருவாக்கின.
- 1968 - அமெரிக்காவின் கறுப்பினத் தலைவர் மார்ட்டின லூதர் கிங் டென்னிசி மாநிலத்தில் கொலை செய்யப்பட்டார்.
- 1968 - அப்பல்லோ 6 விண்கப்பல் நாசாவினால் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1969 - டெண்டன் கூலி என்பவர் உலகின் முதலாவது தற்காலிக செயற்கை இதயத்தைப் பொருத்தினார்.
- 1973 - உலக வர்த்தக மையம் நியூயோர்க் நகரில் நிறுவப்பட்டது.
- 1975 - மைக்ரோசாப்ட் நிறுவனம் பில் கேட்ஸ் மற்றும போல் அலென் ஆகியோரின் கூட்டில் தொடங்கப்பட்டது.
- 1975 - வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அநாதைக் குழந்தைகளை ஏற்றிச் சென்ற அமெரிக்க விமானம் வீழ்ந்து நொருங்கியதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.
- 1976 - இளவரசர் நொரொடோம் சிஹானூக் கம்போடியா தலைவர் பதவியில் இருந்து விலகினார். இவர் பின்னர் வீட்டுக் காவலில் வைக்கப் பட்டார்.
- 1979 - பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி சுல்பிக் கார் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.
- 1983 - சலேஞ்சர் விண்ணோடம் தனது முதலாவது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தது.
- 1999 - பாப்பரசரின் வேண்டுகோளையும் புறக்கணித்து நேட்டோ வான்படைகள் உயிர்த்த ஞாயிறு நாளன்று முன்னாள் யூகொஸ்லாவியா மீது குண்டுகளை வீசின.
- 2002 - அங்கோலாவின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அங்கோலா அரசும் யுனிட்டா போராளிகளும் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

**பிறப்புகள்**

- 1855 - மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை, தமிழ் அறிஞர். (இ.1897)
- 1976 - சிம்ரன், இந்தியத் திரைப்பட நடிகை.

**இறப்புகள்**

- 1841 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9ஆவது ஜனாதிபதி (பி. 1773)
- 1929 - கார்ல் பென்ஸ், பெ றோலினால் இயங்கும் ஊர்தியைக் கண்டுபிடித்த ஜேர்மனிய வாகனப் பொறியியலாளர், (பி. 1844)
- **1968 - மார்டடின் லூதர் கிங், கறுப்பினத் தலைவர். (பி. 1929)**
- 1979 - சுல்பிகார் அலி பூட்டோ, பாகிஸ்தான் ஜனாதிபதி (பி. 1928)
- 1990 - கி. இலட்சுமண ஐயர், ஈழத்து எழுத்தாளர்



### கறுப்பு காந்தி
### மார்ட்டின் லூதர் கிங்

மார்ட்டின் லூதர் கிங் 1929, ஜனவரி 15 ஆம் திகதி அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் பிறந்தார். இவருடைய தந்தை மார்ட்டின் லூதர். தாயார் அல்பெர்டா ஆவார். ஐக்கிய அமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் ஆபிரிக்க-அமெரிக்கத் தலைவர். அவர் காந்தியவழியில் சிறந்த வன்முறையற்ற அறப்போராட்டத்தைப் பயன்படுத்தியவர். மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்க முற்போக்கு வரலாற்றில் ஒரு தேசிய சின்னமாகக் கருதப்படுகிறார். பாப்திசுதப் போதகராக இருந்த கிங் தனது இளமைக்காலத்திலேயே சமூக உரிமைவாதியாக இனங்காணப்பட்டார். 1962 இல் அலபாமாவில் நடந்த வன்முறையற்ற வழியில் இவர் நடத்திய அறப்போராட்டம் பலரது கவனத்தை ஈர்த்ததுடன் தேசிய அளவில் புகழ்பெற்றது.

கிங் 1963 இல் "வேலையும் சுதந்திரமும் வேண்டி வோஷிங்டனுக்கு பேரணி" என்ற மிகப் பெரிய பேரணிக்கு ஏற்பாடு செய்தார். பெருமளவில் மக்கள் திரண்டனர். இங்குதான் அவர் தனது "எனக்கொரு கனவு" என்ற புகழ்பெற்ற சொற்பொழிவினை ஆற்றினார். அமெரிக்க வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. இதன் பறகு அமெரிக்க உளவுத்துறை ஒக்டோபர் 14, 1964 ஆம் ஆண்டில் வன்முறையற்ற வகையில் நிறவெறிக்கெதிராக பாடுபட்டதற்காக மார்ட்டின் லூதர் கிங்குக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

காந்தியடிகளின் அறப்போராட்ட வழியில் ஈர்க்கப்பட்ட மார்ட்டின் லூதர் கிங் டென்னசியில் 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் திகதி சொற்பொழிவிற்காக ஒரு விடுதியில் தங்கியிருந்தபொழுது ஒரு வெள்ளையினத் தீவிரவாதி லூதர் கிங்கை துப்பாக்கியால் சுட்டான். அந்த இடத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. அப்போது அவருக்கு வயது 39.

மார்ட்டின் லூதர் கிங்கின் மறைவிற்கு உலகமே கண்ணீர் அஞ்சலி செலுத்தியது. அவரை கறுப்பு காந்தி என்றும் அழைத்தது. மார்ட்டின் லூதர் கிங் நினைவாக அமெரிக்காவில் ஜனவரி மாதத்தின் மூன்றாவது திங்கட்கிழமை "மார்ட்டின் லூதர் கிங் தினம்" என்று அனுசரிக்கப்பட்டு அன்று அமெரிக்கா முழுவதும் விடுமுறை நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...**பா**றையின் விளிம்பில் நாகராஜ் ஒரு கையைப் பிடித்துக் கொள்ள அந்த ஒட்டில் நவக்கிரகங்களை வலம் வந்தோம். அந்தக் கிடுகிடு பள்ளத்தின் உச்சியில் சுமார் ஆறு அங்குலமே இடைவெளியுள்ள முன் பாறையில் காலை ஊன்றி கீழே பார்க்காமல் வலம் வருவது ஒரு மயிர்கூச்செரியும் அனுபவம்தான். பழக்கப்பட்டவர்களைக் கூட சற்று உதறல் எடுக்க வைக்கும் அபாயகரமான அனுபவம்.

அந்த நவக்கிரகப் பாறையில் முறுக்கிய மீசையுடனும் வெட்டறிவாளுடனும் நின்று நாகராஜ் போட்டோவுக்கு போஸ் கொடுத்தபோது எங்களையும் மீறி சிரித்து சீரியஸான அந்த விநாடிகளை மறந்து இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தோம்.

### ஏ.சி.பாறை

நவக்கிரக கற்களைப் பார்த்துவிட்டு கீழே இறங்குகையில் வலப்புறச் சரிவில் குகையொன்று காணப்படுகிறது. கோரக்கர் குறிப்பிடும் காலாங்கிநாதர் குகை இதுவாக இருக்குமோ என்ற சந்தேகத்துடன் உள்ளே நுழைகிறோம்.

இதை குகை என்று சொல்வதை விட மண்டபம் என்றால் மிகையாகாது. அவ்வளவு வெளிச்சமான உள்ளிடம். சரிவான பாறை தளத்துடன் இருபுறமும் திறந்த வெளியாய் காணப்படும் இதனுள்ளே சென்றால் சில்லென்ற குளிர்காற்று நம்மைத் தழுவி நிற்கிறது.

மலைமேல் வீசும் மலைக்காற்றின் சுகம் அதை அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும். இவ்விதம் குளிர்ச்சியான காற்று வீசுமிடமாதலால்தான் இதனை எல்லோரும் ஏசி பாறை என்றழைக்கின்றனர். உள்ளே ஹாயாக உட்கார்ந்து கொண்டு கதை பேசலாம். உலகத்தை களை மேகம் தவழும் விண்ணழகை, பொடிப்பொடி பொம்மைப் பெட்டிகளாய் காட்சி தரும் மகாலிங்கர் கோயில், சந்தன மகாலிங்கர் கோயில், பயணிகள் தங்கும் ஷெட்கள் என்று இயற்கையை



தவசிப்பாறை சிவலிங்கம்

மறந்து சற்று கண்ணயரலாம். எவ்வளவு சுகம் தெரியுமா? இதைவிட இதன் விளிம்பில் அமர்ந்து கொண்டு சதுரகிரி மலையழகை, அதன் கிடுகிடு பள்ளத்தாக்கை, பசுமை போர்த்தி மலை முகடு இன்பமாய் ரசிக்கலாம்.

ஆனாலும் அபாயகரமான ஓர் எச்சரிக்கையும் தேவை. இயற்கையை அனுபவிக்கிறேன் பேர்வழி என்று சற்று அதிகமாக எட்டிப்பார்த்து கொஞ்சம் பேலன்ஸ் தவறினாலும் நம்முடல் நமக்குச் சொந்தமில்லை என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மழைக் காலங்களில் வனவிலங்குகள், குரங்குகள் உட்பட அனைத்தும் இந்த மண்டபத்தில் தங்கிச் செல்லுமாம்.

## ஆன்மீகம் 82

சித்தர்கள் வாழ்ந்த காலங்களில் இங்குதான் கூடி முக்கிய ஆலோசனைகள் நடத்துவார்களாம். இரவில் தங்குபவர்கள் விளக்கேற்றி இருந்ததற்கு அடையாளமாக பாறையில் விளக்குக்காக பள்ளம் பொறிக்கப்பட்டிருந்தது.

சதுரகிரி வன யாத்திரையில் இந்த ஏசி பாறை அனுபவம் மறக்க முடியாதது.

### மகாலிங்க மலை உச்சி

ஏசி பாறையை விட்டு கீழிறங்கி மறுபடியும் மேலே ஏறுகிறோம். இப்பொழுது முழுக்க முழுக்க மண் பாதைதான் தென்படுகிறது. வழியெங்கும் மூலிகைச் செடிகள், ஓரிதழ் தாமரைச் செடி ஆங்காங்கே நீட்டிக் கொண்டிருக்க அதனை மாதிரிக்காகப் பறித்துக் கொண்டார் உமா.

இதோ பாருங்கள் இதுதான் காட்டு நாரத்தை. சிறியதாக மரமுமில்லாமல் செடியுமில்லாத ஒரு குறு மரத்தின் மீதிருந்து நாரத்தங்காய்களைப் பறித்துப் போட்டார் நாகராஜன்.

வித்தியாசமான சுவையாக இருக்கவே ஆளாளுக்குக் கசக்கி முகரத் தொடங்கினோம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**01** நாவற் பழத்தை ஊதிவிட்டுச் சாப்பிடும் ஒரு மாட்டிடையன் மாதிரி...

நான் என்பது இலக்கணத்தில் ஒருமை; நடைமுறையில் பன்மை.

என்னைப் பொறுத்தவரையில் நான் என்பது இந்தச் சமூகம் பங்களித்து நிரப்பிய பாத்திரம்.

சின்னஞ்சிறு வயது முதல் என் இதயக் குளத்தின் மேற்பரப்பில் அலைகள் கிளப்பியவர்கள்- சலனம் செய்தவர்கள்- பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் பலர்.

அந்தப் பலரில் சிலர் மட்டும் இதில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த முயற்சியின் நோக்கம் தனி மனிதர்களின் குணாதிசயங்களை கொண்டாடுவதன்று.

என்னைப் பாதித்த பெரு மக்களை புள்ளிகளாய் கொண்டு என் சமகால சமூகக் கோலம் வரைந்து காட்டுவதே இதன் நோக்கம்.

இன்னொரு வகையில் சொல்வதானால் இது நன்றி பாராட்டு ஒரு நாகரிக வடிவம்.

பாறையாய் கிடந்த என்னை இலக்கியவாதியாய் இளக்கியவர்கள்- தமிழுக்கு என்னைப் பழக்கியவர்கள்- இலட்சியங்களை எனக்குள் விதைத்தவர்கள்- என் மெல்லிய புலன்களை மயிலிறகால் வருடியவர்கள்- வாழ்வின் முக்கியமான நிமிடங்களில் என்னை முடிவெடுக்க வைத்தவர்கள்- சமுத்திரம் நிலப்பரப்பை பாதிப்பது மாதிரி என் சமகாலத்தையே பாதித்தவர்கள்- சராசரி மனிதர்களாய் இருந்தும் என்னுள் சரமழையாய் விழுந்தவர்கள்- இவர்களெல்லாம் எனது சின்னத் தூரிகையில் சித்திரமாகி இருக்கிறார்கள்.

இந்த ஜீவனுள்ள மக்களை சிந்திப்பதன் முக்கிய விளைவுகள் மூன்று:

சில மாமனிதர்களின் சமூகப் பங்கை இதில் சத்தமில்லாமல் மதிப்பிட முடிகிறது.

நசிந்துபோன பல இதயங்களுக்கு இதில் நம்பிக்கை பிறக்கிறது.

என் இறந்த காலத்தில் மீண்டும் வசித்துவர எனக்கொரு வசதி கிடைக்கிறது.

என்னைப் பாதித்த பலரிடமும் நான் நல்லவை மட்டுமே கண்டிருக்கிறேன்.

மண்ணில் விழுந்த நாவற் பழத்தை ஊதிவிட்டுச் சாப்பிடும் ஒரு மாட்டிடையன் மாதிரி ஒவ்வொரு மனிதரிலும் அற்புதமான அம்சங்களை மட்டுமே நான் ஆராதிக்கிறேன்.

நல்லவை எண்ணும் போதும் நல்லவை எழுதும் போதும் மட்டுமே நெஞ்சில் நிம்மதி நிறைந்து நிற்கிறது.

காழ்ப்புகள்- கட்சிகள்- மாச்சரியங்கள்- மதங்கள்- நசிந்து கொண்டிருக்கும் நல்லுணர்வுகள் இவைகளால் சர்வதேச மனிதம் சரிந்து கொண்டிருக்கிற ஒரு மோசமான நூற்றாண்டின் முடிவிலும் ஒரு துன்பமான நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாம் இருக்கிறோம்.

அன்பை விதைப்பதும் புதுப்பிப்பதும் மனிதர்களை மதிப்பதுமே இந்த நூற்றாண்டின் தேசியத் தேவை.


அதை இது செய்யலாம்;

செய்யும்.

வைரமுத்து



## பொன்னையாத் தேவர்



**தா**த்தா!

உங்களை நினைக்கும் போது எங்கே தான் பதுங்கியிருக்குமோ இந்தக் கண்ணீர்...

இப்படி எழுந்து வருகிறதே! ஏன் தாத்தா?

என் பிஞ்சுப் பிராயத்தில் ஒரு கோழிக் குஞ்சாய் நான் கண்வழித்தபோது என் மீது சுள்ளென்று அடித்த சூரியன் நீங்கள்தான்.

அதனால்தானா?

இந்த வானத்தின் கீழ் வாழ்க்கையின் சில சதுர மைல்களை எனக்கு அறிமுகப்படுத்திய ஆத்மா நீங்கள்தான்!

அதனால்தானா?

மாதுளம்பழம் பழுத்து வெடிக்கையில் உள்ளிருக்கும் முத்துக்கள் பாதிச் சிரிப்புச் சிரிப்பதுமாதிரி- மனசு பழுத்து வெடிக்கையில் உங்கள் ஞாபகங்கள் முக்கால் பங்கு நீரில் மூழ்கிய பனிக் கட்டியாய் முகங் காட்டுகின்றன.

உங்களை நினைத்தால் நான் அழுது விடுகிறேன் தாத்தா.

துக்கமில்லாமலும் வெட்கமில்லாமலும் என்னால் அழப்படும் ஒரே அழுகை அதுதான் தாத்தா.

பஞ்சு மிட்டாய்க் கலரில் ஒரு கம்பளி வைத்திருந்தீர்களே! மாசி பங்குனி மச்சும் குளிரும் என்று பழமொழி சொல்லி- அந்தக் கம்பளிக்குள் என்னை அடைகாத்திருக்கிறீர்களே- என் மனசுக்குள் அந்த எட்டு வயசு இன்னும் இருக்கிறது தாத்தா.

கத்தரிக்காய் மூட்டையின் மேல் என்னையும் ஓர் உயிர் மூட்டையாய் ஏற்றி வைத்து அழைத்துச் சென்று தேனிச் சந்தையில் எனக்கு முதன் முதலில் அல்வா வாங்கிக் கொடுத்தீர்களே! அந்த இனிப்பின் ஈரம் என் நாவிலும் ஞாபகங்களிலும் உயிரின் கடைசிச் சொட்டு இருக்கும் வரை உலர்ந்து போகாது தாத்தா.

முழுக்கைச் சட்டைக்கு துணி வாங்கி அரைக்கைச் சட்டையாய்த் தைக்கப்பட்ட உங்கள் சட்டை ஆணியில் ஆடும் போது உள்ளிருக்கும் சில்லறைகள் தேவகானம் பாடுமே.

உலக வானொலியின் எந்த அலை வரிசையிலும் அப்படி ஓர் ஒலிபரப்பை இன்றுவரை நான் கேட்டதில்லை தாத்தா.

உங்களுக்குப் படிக்கத் தெரியாது; நிமிஷத்திற்கு இரண்டு வார்த்தைகளே எழுத்துக் கூட்ட முடியும். ஆனால் படிக்கத் தெரியாத உங்களிடம் நான் படித்துக் கொண்டது அநேகம்....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## ஆசிரிய மாணவர்களின் கற்றல் குணவியல்புகள்

## ஆசிரிய மாணவர்களுக்கு பொருத்தமான கற்பித்தல்-கற்றல் முறைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### 8.குழுமுறைக் கற்றல்


மனிதனுள் இயற்கையாகவே அமைந்திருக்கும் குழுவாகக் செயற்படும் விருப்பு எனும் உளவியல் விருப்பினை/ அடிப்படையாகக் கொண்ட ஒரு கற்றல் நுட்பமுறை இதுவாகும். தனியாக கற்பதைவிட குழுவாக கற்றல் கூடிய பயனுடையதென பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இம் முறையில் கலந்துரையாடல்கள், மதிப்பாய்வுகள், அவதானிப்புகள், பரிசோதனைகள், செயறறிட்டங்கள், ஒப்படைகள் பேரன்றவற்றை மேற்கொள்ளலாம். கல்வி



யியற் கல்லூரிகளை சேர்நத உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆசிரிய மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் 4 செயற்றிட்டங்கள் செய்யவேண்டியுள்ளது. இவற்றில் இரண்டு குழுவாக செய்ய வழங்கப்படுகிறது. குழுச செயற்பாட்டின் மூலம் ஆசிரிய மாணவரிடையே "ஒருவருக்கு ஒருவர் உத வுதல்" எனும் பண்பு வளர்க்கப்படும். இம் முறையால் ஒவ்வொருவரும் தனித்தனியாக அறிந்த விடயங்கள் ஏனையோரிற்கும் கிடை க்க வழிசெய்யப்படுகின்றது.

### 9.நுண்முறைக் கற்பித்தல் (Micro teaching)


ஆசிரிய மாணவர் ஒருவர் பாடத்தைக் கற்பிக்கும் போது, அதனை வீடியோ படம் பிடித்து அவரைப் பார்க்கச் செய்வதன் மூலம், அவ்




வாசிரிய மாணவனின் கற்பித்தல் தொடர்பான குறைபாடுகளை இனங்கண்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு தொடர்ந்தும் கற்பித்தல் மூலமும் வீடியோ படத்தை பார்ப்பதன் மூலமும் கற்பித்தற் திறன்களை மேம்படுத்திக் கொள்ளலாம். நுண்முறைக் கற்பித்தலினூடாகக் கற்பிக்கப்படும் ஒரு பாடத்தின் மூலம் ஆசிரிய மாணவர் பெறும் அறிவு நெடுங்காலம் நிலைத்து நிற்கக் கூடிய உறுதியான அறிவாக அமையும். கல்வியியற் கல்லூரியின் பிரதான நோக்கம் அங்கு பயிற்றுவிக்கப்படும் ஆசிரிய மாணவர்களை நல்லதோர் ஆளுமைமிக்க துடிப்பான ஆசிரியராக உருவாக்குவதேயாகும். இந்நோக்கலுக்கு நுண்முறைக் கற்பித்தல் உத்திகள் பெரிதும் உதவும்.

### 10.போல அமைத்துக் கற்றல் (Simulation)

ஒருவருடைய செயற்பாட்டை அவதானித்து தாங்களும் அவ்வாறு செய்ய முயல்வதே போல அமைத்துக் கறறலாகும். இம்முறை கல்வியயற்



கல்லூரிகளை சேர்ந்த ஆசிரிய மாணவர்களுக்கு கற்பித்தற் பயிற்சிகள் போது (Block Teaching) பெரிதும் பயன்படும்.

கறபித்தற் பயிற்சிக்கு செல் வதற்கு முன்பாக ஒரு விரிவுரையாளரோ அல்லது கல்விப்புலத்தில் திறமை மிக்க ஒரு வரோ ஒரு "மாதிரி கற்பித்தல் முறையை" முதலில் செய்து காட்ட வேண்டும். அவற்றை அவதானித்த ஆசிரிய மாணவர்கள் பின்னர் தாங்கள் தனித்தனியாக பாட ஆயத்தம் செய்து ஒரு வகுப்பிற்கு கற்பித் துக்காட்ட வேண்டும். அதனை விரிவுரை யாளரும் ஏனைய சக பாடி ஆசிரிய மாணவர்களும் அவதானித்து தங்கள் கருத்துக் களை கூறுவதன் மூலம் கற்பித்தல் உத்திகளை மேலும் வளர்த்துக் கொள்ள இம்முறை பெரிதும் உதவும்.

### 11.அணிமுறைக் கற்பித்தல் (Team Teaching)

பல விரிவுரையாளர்கள் ஒன்று சேர்ந்து கற்பிக்கும் முறையை ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த "லொயிட்டிரட்ம்" என்பவர் அறிமுகப் படுத்தினார். இம்முறை கல்வியியற்கல்லூரியில் ஒரு சில பாடங்களுக்கு பொருத்தமாக அமையும். உதாரணமாக விஞ்ஞான பாடத்தைப் பொறுத்தவரை அதில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் எனும் மூன்று பிரதான பகுதிகள் உள்ளன. விரிவுரையாளர்களைப் பொறுத்த வரை ஒருவர் மேற்படி மூன்று துறைகளி




லும் பாண்டித்தியம் பெற்றவராக இருப்பது அரிது. எனவே இம் மூன்று துறைகளையும் சேர்ந்த விரிவுரையாளர்கள் ஒன்று சேர்ந்து மூவருமாக கற்பித்தலில் ஈடுபடலாம். ஒவ்வொரு விரிவுரையாளரும் ஒவ்வொரு துறையில் விற்பனராக இருப்பதால் இங்கு கற்றல் - கற்பித்தல் ஆகிய இரு செயற்பாடுகளும் வினைத்திறனாக அமையும்.

### 12.செய்திட்ட முறைக் கற்பித்தல்


ஆசிரிய மாணவர்களால் திட்டமிடபபடும் செயற்பாடுகள் கருத்துள்ளவையாக, யதார்த்தமானவையாக, உயிர்புள்ளவையாக அமைவதோடு ஒரு கற்றல் குறிக்கோளை இலக்காக கொண்டதாக அமைக்கப்பட்டு அவர்களாலேயே செயற்படுத்தப்படுவதாகும். மேற்படி செய்திட்ட வடிவமைப்பிலோ அல்லது செயற்பாட்டிலோ விரி



வுரையாளர் தலையிடாது, ஆசிரிய மாணவர்களின் பங்களிப்புடன் அதனை விருத்தி செய்ய உதவவேண்டும். செய்திட்ட படிமுறையாக முதலில் நோக்கத்தை அல்லது பிரச்சி னையை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதன் பின் செயற்பாட்டை திட்டமிட வேண்டும். பின்னர். திட்டத்தை செயற்படுத்தி அதனை மதிப்பிடவேண்டும். மேற்படி செயற்பாடுகள் யாவற்றையும் ஆசிரிய மாணவரே செய்ய வேண்டும். தேவைப்படும் இடங்களில் விரிவுரையாளர் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கலாம். இம்முறையால் ஆசிரிய மாணவர்களிடம் சுயமாக இயங்கும் திறனும் ஒரு பிரச்சினையை அணுகும்முறையும் விருத்தியடையும்.

### 13.ஒப்படை முறை

"கற்பவரின் அடைவுகளுக்காக அவரே செயற்பாடுகளில் ஈடுபடல்" என இம்முறையை வரையறுக்கலாம். ஒப்படைகள் தனியாகவோ அல்லது கூட்டாவோ வழங்கப்படலாம்.குறித்த ஒரு நோக்கத்தை அல்லது நோக்கங்களை அடையும் வகையில் ஆசிரிய மாணவர்களால் ஒப்படைகள் செய்யப்படுகின்றன. கல்வியியற் கல்லூ



ரிகளைப் பொறுத்தவரை அநேகமாக எல்லாப்பாட நெறியை சேர்ந்த ஆசிரிய மாணவர்களுக்கும் ஒப்படை முறையை பயன்படுத்தலாம். லீவு காலங்களில் உள்ள நேரத்தை பயன்மிக்கதாக பயன்படுத்த ஒப்படைகள் திட்டமிட்டு கல்வியலாளர்களினால் வழங்கப்பட வேண்டும். ஒப்படைகளை செய்வதனூடாக ஆசிரிய மாணவர்களின் அறிவு, திறன், ஆற்றல் என்பன விருத்தியடையும். கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கு காலத்திற்கேற்ற பிரச்சினை ஒன்றை அடிப்படையாக கொண்ட ஒப்படை, கல்லூரி நிகழ்வை அறிக்கைப்படுத்தல் சம்பந்தமான ஒப்படை என்பன பொருத்தமானதாகும். உதாரணமாக டெங்கு காய்ச்சலை ஒழிக்கும் வழிமுறைகள், கல்லூரியின் விஞ்ஞான மன்ற செயற்பாட்டை அறிக்கைப்படுத்தல் போன்றவற்றை வழங்கலாம்.


### கற்றல் விளைவுகளின் மதிப்பீடு மற்றும் பின்னூட்டல் உபாயங்களின் முக்கியத்துவம

ஆசிரியத் தொழிலின் இதயம் போதனை எனின் மதிப்பீடு அதனை உந்தும் சக்தியாகும். வாழ்க்கையில் எந்த ஒரு மனிதனும் மதிப்பீடு செய்தல், மதிப்பீட்டிற்கு உள்ளாதல் என்பவற்றை தவிர்க்க முடியாதுள்ளான். ஆசிரிய கல்வியியலாளர்களால் மேற்கொள்ளப்படும் நியாயத் தீர்ப்புக்கள் ஆசிரிய மாணவர்களின் வாழ்க்கையை பாதிக்கலாம். இவ்வகையில் மதிப்பீடு என்பது நெருக்கீட்டினை ஏற்படுத்துவதும்

> **மதிப்பீடு என்பது நெருக்கீட்டினை ஏற்படுத்துவதும் முரணான விளைவை உருவாக்கக்கூடியதும் ஆகும்**

முரணான விளைவை உருவாக்கக்கூடியதுமென கருதப்படுகிறது. எனவே ஆசிரிய மாணவர்களை மதிப்பீடு செய்வதற்குரிய தேர்ச்சியை ஆசிரிய கல்வியியலாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்சியை திட்டமிடும் போது மாணவர்களின் அடைவுகளை மதிப்பீடு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். மதிப்பீடு தொடர் பான தீர்மானத்தினை கல்வியியலாளர் மேற்கொள்ளும் போது கருத்திற் கொள்ளும் காரணிகள், ஆசிரிய மாணவர்களின் இயல்புகளிலிருந்து அரசின் மதிப்பீட்டுக் கொள்கை வரை வேறுபடலாம். ஆசிரிய கல்வியியலாளர் ஒருவர் ஒரு குறித்த ஆசிரிய மாணவர் குழுவிற்கு தரப்பட்ட சோதனை பொருத்தமற்றதாக இருப்பின் அவருக்கு அதனை மறுதலிக்கும்





உரிமை உண்டு.

### மதிப்பீட்டின் நோக்கங்கள்

ஆசிரிய கல்வியியலாளரின் தீர்ப்புக் கூறும்தன்மையானது அவர் பெற்ற பயிற்சி, அனுபவம் உள்ளுண ர்வு, விழுமியங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. இதுவே கல்வியியலாளரின் பெறுமதிமிக்க சொத்தாகும். வாண்மை சார் தீர்ப்பினை வழங்குவதற்கு ஏற்ற தகவல்களை கணிய வடிவில் தருவதற்கான செயல் நெறியே அளவீடு எனப்படும்.

ஆசிரிய கல்வியியலாளரின் பிரபல்யம் வாய்ந்த அளவீட்டுக் கருவியான சோதனை, பரீட்சை எனப்படுகின்றது. சோதனையானது விடையளிக்க வேண்டிய நியமப்படுத்தப்பட்ட வினாக்களின் தொகுதியை உள்ளடக்குகின்றது.

அளவீட்டுத் தரவுகள் ஆசிரியருக்கு பல




வகையான தீர்மானங்களை எடுக்க உதவுகின்றன. Kenneth, Hopkins, Stanlely ஆகியோர் மூன்று வகையான ஆட்சிகளை இனங்கண்டுள்ளனர்.

#### 1.போதனைவழி ஆட்சி (Instructional Domain)

ஆசிரிய மாணவரின் கற்றலுக்கும் ஆசிரிய கல்வியியலாளரின் திட்டமிடலுக்கும் இடையில் நேரிடையாக உள்ள தீர்மானங்களை உள்ளடக்கும்.

#### 2.நிர்வாக வழி ஆட்சி (Administrative Domain)

இது கல்வியியற் கல்லூரியின் வினைத்திறன், வளங்களின் பங்கீடு, ஆசிரிய மாணவர்களை வகையாக்கல் என்பவற்றை உள்ளடக்கும்.

#### 3.வழிகாட்டல் சார் ஆட்சி (Instructional Domain)

விசேட தேவைகள், உளசார்பு, ஆற்றல் என்பவற்றிற்கான பரிகாரங்களை உள்ளடக்கும்.

(தொடரும்...)

**A.Gugan**
BSc.(cey), PGDE, MSc.(Phy of Mat),MATE(International)
Lecturer.(SLTES III)
J/National College of Education

## வாரத்திற்கு ஒரு புதிர்! 106

கழியூதாக் கதிரின் அலைநீள வீச்சு யாது?

**புதிர் 106 இற்கான விடைகளை 14.04.2014 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.அ.குகன்**
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 105 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி** வெல்லப்படவில்லை

**புதிர் 105 க்கான கேள்வியும் விடையும்:**
DVD என்பதன் விரிவு யாது?

"digital video disc" or "digital versatile disc"

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 106

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிபுகளால் ஆடிப்போயுள்ள அரசு ஜனாதிபதி தேர்தலை நடத்தாது



## அடித்துக் கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

**மாகாண சபைத்தேர்தல் முடிவுகளால் ஆடிப் போயுள்ள அரசாங்கசம் ஜனாதிபதி தேர்தலையோ பொதுத்தேர்தலையோ நடத்தப்போவதில்லையென அடித்துக்கூறும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் என்ற மரத்தின் வேர்களை மக்கள் தளர்வடையச் செய்துள்ளனர். இனி அனைத்துக் கட்சிகளும் இணைந்து அம்மரத்தை கீழே விழுத்த வேண்டியது மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் கூறியுள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இங்கு அவர மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தென் மற்றும் மேல் மாகாண சபை தேர்தல்களில் மக்கள் அரசாங்கததிற்கு ஆபத்து சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த தேர்தலைவிட அரசாங்கம் பின்னடைவைக் கண்டுள்ளது.

அரசாங்கம் என்ற மரத்தின் வேர்களை மக்கள் தமது வாக்குப் பலத்தால் தளர்வடையச் செய்துள்ளனர். இனி அரசாங்கம் என்ற மரத்தை கீழே சாய்த்துவிடுவதே எஞ்சியுள்ளது.

இதற்காக ஜே.வி.பி., தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஜனநாயகக் கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும். அது மட்டுமல்லாது, பொது அமைப்புக்களும் ஒன்று சேர்ந்தால் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப முடியும்.

அதற்காக வீதியில் இறங்கி தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்த வேண்டும். தற்போதைய சூழ் நிலையில் அரசாங்கம் ஜனாதிபதி தேர்தலையோ, பொதுத் தேர்தலையோ நடத்தப் போவதில்லை. தேர்தல் முடிவுகள் அரசாங்கத்தை ஆட்டங்காண வைத்துள்ளது.

தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டது. தற்போது எமது கட்சியை பலப்படுத்தி முன்னோக்கி கொண்டு செல்லும் தேவை ஏற்பட்டுள்ளது. இதனால் கட்சியின் தலைமைத்துவ சபையும், நிறைவேற்றுக் குழுவும் கூடி எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான முடிவுகளை எடுக்கும் என்றார். (2)

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
# தேசிய போட்டிக் கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் கீழ் குறிப்பிடப்படும் நிர்மாண. வீதிகள் புனரமைப்பு வேலைகளுக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

(அ-6857)

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 07.04.2014 தொடக்கம் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் திட்டமிடல் பணிப்பாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல.021 222 2427, 021 222 7583) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மாவட்டத்திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 07.04.2014 முதல் 24.04.2014 வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000 ரூபாவை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 24.04.2014 திகதியன்று பிற்பகல் ஒரு மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 24.04.2014 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப் பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | பிரதேச செயலர் பிரிவு | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்தகாலம் (மாதம்) | தேவையான இக்ராட் தரம் | கேள்வி பிணைத் தொகை(ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/DPS/VW/CON/11/2013 | வேலணை | அல்லைப்பிட்டி சாமிக்கட்டு வீதி புனரமைப்பு, | 9.772 | 3 | C7 | 98,000.00 |
| JF/DPS/VW/CON/12/2013 | வேலணை | மண்டைதீவு கொண்டகம் வீதி புனரமைப்பு | 8.269 | 3 | C7 | 83,000.00 |
| JF/DPS/VW/CON/13/2013 | வேலணை | வேலணை அண்ணமார் வீதி புனரமைப்பு | 2.423 | 3 | C8 | 24,000.00 |
| JF/DPS/VW/CON/14/2013 | வேலணை | சரவணை கலைமகள் வீதி புனரமைப்பு | 3.518 | 3 | C7 | 35,000.00 |
| JF/DPS/VW/CON/15/2013 | வேலணை | நயினாதீவு கிழக்கு கடற்கரை வீதி புனரமைப்பு | 9.972 | 3 | C7 | 100,000.00 |
| JF/DPS/VW/CON/16/2013 | வேலணை | வேலணை மொங்கானைப்புலம் திருவள்ளுவர் வீதி புனரமைப்பு | 5.281 | 3 | C7 | 53,000.00 |
| JF/DPS/VW/CON/17/2013 | வேலணை | வேலணை செட்டிபுலம் முருகன் கோவில் வீதி புனரமைப்பு | 5.348 | 3 | C7 | 53,000.00 |
| JF/DPS/VW/CON/18/2013 | வேலணை | நவீன உபகரணங்களுடன் தொழில் பயிற்சி நிலையம் வேலணையில் அமைத்தலும் | 6.999 | 3 | C7 | 70,000.00 |
| JF/DPS/VW/CON/19/2013 | வேலணை | வேலணையில் நவீன உபகரணங்களுடன் பூங்கா அமைத்தல் | 2.161 | 3 | C8 | 22,000.00 |
| JF/DPS/VW/CON/20/2013 | ஊர்காவற்றுறை | எழுவைதீவு வீதி புனரமைப்பு செய்தல் | 7.915 | 3 | C7 | 80,000.00 |
| JF/DPS/VW/CON/21/2013 | ஊர்காவற்றுறை | அனலைதீவு உப அலுவலக வளாகத்தில் கடைத்தொகுதி மற்றும் மதில் அமைத்தல் | 4.426 | 3 | C8 | 44,000.00 |
| JF/DPS/VW/CON/22/2013 | ஊர்காவற்றுறை | எழுவைதீவில் உப அலுவலக கட்டடம் மற்றும் நூலகம் அமைத்தல் | 6.168 | 3 | C7 | 62,000.00 |
| JF/DPS/VW/CON/23/2013 | ஊர்காவற்றுறை | அனலைதீவு குடியேற்றத்திட்ட வீதி புனரமைப்பு – கட்டம் - I | 3.91 | 3 | C8 | 44,100.00 |
| JF/DPS/VW/CON/24/2013 | வேலணை | வேலணை செட்டிபுலத்தில் உவர்நீர் தடுப்பணை அமைத்தல். | 3.485 | 3 | C8 | 35,000.00 |
| JF/DPS/VW/CON/25/2013 | வேலணை | நயினாதீவில் உவர்நீர் தடுப்பணை அமைத்தல் | 3.587 | 3 | C8 | 36,000.00 |

**சுந்தரம் அருமைநாயகம், அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாண மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளிகளுக்குத்தான் அமெரிக்கா சொந்தமா?

பிரெஞ்சுப் பொருளாதார அறிஞர் தாமஸ் பிக்கெட்டியின் **'கேபிட்டல் இன் த ட்வெண்ட்டி-ஃபர்ஸ்ட் சென்ச்சுரி'** என்ற புத்தகத்தை இந்த ஆண்டின் சிறந்த பொருளாதாரப் புத்தகமாக மட்டுமல்ல, கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த பொருளாதாரப் புத்தகம் என்றும்கூடச் சொல்லலாம்.

வருமானம், சொத்துடைமையில் காணப்படும் ஏற்றத்தாழ்வு போன்ற விடயங்களில் பிக்கெட்டிதான் உலக் அளவில் தலையாய வல்லுநர். பொருளாதார ரீதியில் உயர்தட்டில் காணப்படும் ஒரு சிறிய குழுவினரின் கையில்தான் வருமானம் எல்லாம் போய்ச் சேர்கிறது என்பதை ஆவணப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வேறொரு விடயத்தையும் பிக்கெட்டி செய்திருக்கிறார்.

### வாரிசு முதலாளித்துவம்

'வாரிசு முதலாளித்துவம்' என்ற நிலையை நோக்கி நாம் எல்லோரும் போய்க்கொண்டிருக்கிறோம் என்பதை இந்தப் புத்தகத்தில் அவர் வலுவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். பொருளாதாரத்தின் அதிகாரமட்டம் என்பது வெறும் செல்வத்தால் மட்டுமல்லாமல், வாரிசு வழிச் சொத்துகளாலும் ஆதிக்கம் செலுதப்படுவதுதான் 'வாரிசு முதலாளித்துவம்'. இதில் முயற்சியையும் திறமையையும்விட ஒருவருடைய பிறப்புதான் முக்கியம்.

### சிலராதிக்கத்தை நோக்கி

ஆனால், நாம் இன்னமும் அந்த நிலையின் உச்சத்தை அடைந்துவிடவில்லை என்கிறார் பிக்கெட்டி. இதுவரை, அமெரிக்காவின் 'உயர்மட்ட ஒரு சதவீததினர்' என்னும் வர்க்கம் கவர்ச்சிகரமான ஊதியம், சிறப்பூதியம் போன்றவற்றின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறதே தவிர, முதலீடுகளிலிருந்து வரும் வருமானத்தாலோ இன்னும் சொல்லப்போனால் பரம்பரைச் சொத்து மூலமாகக் கிடைக்கக்கூடிய வருமானத்தாலோ அல்ல.

என்றாலும்கூட, அமெரிக்காவின் மிகப் பெரிய 10 பணக்காரர்களில் ஆறு பேர் பெரும் செல்வந்த வாரிசுகளாகத்தான் இருக்கிறார்கள். எனவே, இன்றைய பொருளாதார உய்ர் வர்க்கத்தினரின் குழந்தைகள் தங்கள் வாழ்க்கையை ஏகபோகமான ஒரு இடத்திலிருந்தே தொடங்குகிறார்கள். "சிலராதிக்கத்தை, அதாவது தொழில்துறை, நாடு போன்றவை சிலரது ஏகபோகத்தில் இருக்கும் நிலையை, நோக்கிய நகர்வு என்பது உண்மைதான். இந்த நிலை நமக்குச் சிறிதும் நம்பிக்கை அளிப்பதாக இல்லை" என்கிறார் பிக்கெட்டி.




### யார் நலன் முக்கியம்?

உண்மைதான். உங்கள நம்பிக்கை இன்னும் குறைய வேண்டுமென்றால், அமெரிக்க அரசியல்வாதிகளெல்லாம் எதில் மும்முரமாக இருக்கிறார்கள் என்று பாருங்கள். அமெரிக்காவில் துளிர்விடும் சிலராதிக்கம் இன்னும் முழுதாக உருப்பெறாமல் இருக்கலாம். ஆனால், இரண்டு பிரதான கட்சிகளுள் ஒன்று, சிலராதிக்கத்தின் நலனைக் காப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறது.

தாங்கள் அப்படியெல்லாம் இல்லை என்று குடியரசுக் கட்சியினர் அவசரஅவசரமாகப் பூசி மழுப்ப முயல்கின்றனர். ஆனாலும், 'பழம்பெரும் கட்சி' (குடியரசுக் கட்சி) சாதாரண மக்களின் நலனைவிட செல்வந்தர்களின் நலன்மீதே அக்கறை கொண்டுள்ளது என்று மக்களுக்குத் தெரியாதா, என்ன? இருந்தும், சம்பளங்களின் மூலம் கிடைக்கும் இலாபத்தைவிட, சொத்துகளின மூலம் கிடைக்கும் இலாபத்தின் மீதே குடியரசுக் கட்சி அக்கறை கொண்டுள்ளது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? ஊதியங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைவிட, பரம்பரை சொத்திலிருந்து வரக்கூடிய வருமானத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதுதான், அதாவது வேலையைவிட சொத்து பிரதானமாக இருப்பதுதான் 'வாரிசு முதலாளித்துவம்' என்பதெல்லாம்.

### செல்வந்தர்களுக்கு வரிகள் தேவையில்லையா?

அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் பார்த்தால், நான் சொல்வது என்ன என்பது உங்களுக்குப் புரியும். செல்வந்தர்களுக்கான வரிகளைத் தளர்த்துவதற்குக் குடியரசுக் கட்சியின் ஜார்ஜ் டபிள்யூ. புஷ் தன்னால் இயன்றதையெல்லாம் செய்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். நடுத்தர வர்க்கத்தினரின் வரிகளைக் குறைத்ததெல்லாம்கூட அரசியல் இலாபத்துக்கான சலுகைகள்தான்.

இந்த வரிச்சலுகைகளால் அதிகபட்ச இலாபமடைந்தது அதிக ஊதியம் பெறுபவர்களல்ல, பங்கு பத்திரங்கள் வைத்திருப்பவர்களும் பெரும் சொத்துக்கு வாரிசுகளாக இருப்பவர்களும்தான் என்பது பலருக்கும் தெரியாது. ஊதிய வருமானத்துக்கான வரி வரம்பு 39.6 சதவீதத்திலிருந்து 39.6 சதவீதத்துக்குக் குறைந்ததென்பது உண்மை தான். ஆனால், இலாப ஈவுக்கான (டிவிடெண்டு) வரி என்பது 39.6 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்துக்குக் குறைக்கப்பட்டது. சொத்துவரியோ முழுவதுமாக நீக்கப்பட்டது.

### சில மாற்றங்கள்

ஜனநாயகக் கட்சியின் ஒபாமா அதிபரான பிறகு, இந்த நிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால், ஒரு விடயம் தெளிவு, புஷ் காலத்தில் கொண்டுவரப்பட்ட வரிக்குறைப்புகளெல்லாம் ஊதியமாக இல்லாத வருமானத்தின் மீதான வரிகளைக் குறைத்த செயல்கள் தான்.

நாடாளுமன்றத்தின் ஒரு அவையைக் குடியரசுக் கட்சியினர் கைப்பற்றியபோது, அந்தக் கட்சியின் பிரதிநிதி ஒரு திட்டத்தை முன்வைத்தார். வட்டி, இலாப ஈவு, மூலதன ஆதாயங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவை மீதான வரிகளை நீக்குவது என்பதுதான் அந்தத் திட்டம். முழுக்க முழுக்கப் பரம்பரைச் சொத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் எந்த வரியையும் செலுத்தத் தேவையில்லை.

### முதலாளிகளைப் போற்றுவோம்!

செல்வந்தர்களின் நலன் சார்பாக முடிவெடுப்பது என்ற மனச்சாய்வு குடியரசுக் கட்சியினரின் பேச்சுகளிலும் பிரதிபலிக்கிறது. 'வேலை தருவோ'ரை அடிக்கடி புகழும்போது குடியரசுக் கட்சியினர், அமெரிக்கத் தொழிலாளர்களை வசதியாக மறந்துவிடுகின்றனர். 2012 இல் குடியரசுக் கட்சியின் பிரதிநிதி எரிக் கேன்டர் முதலாளிகளைப் போற்றி டிவிட்டர் பதிவிட்டதன் மூலம், தொழிலாளர் தினத்தை (செப்ரெம்பர் 1) கொண்டாடினார். பெரும்பாலான அமெரிக்கர்கள் பிறருக்காக வேலை செய்பவர்கள் என்றும் ஒருமுறை அவர் கூறியிருக்கிறார்.

### இராஜபோகமான குழு

உண்மைதான். பெரும்பாலான அமெரிக்கர்கள் சொந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கவில்லைதான். அதுமட்டுமல்ல, தொழில் வருமானம், மூலதன வருமானம் போன்றவையும் ஒருசிலருடைய கைகளில் போய்ச்சேர்வதென்பது அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. 1979 இன்படி அமெரிக்காவில் 'உயர்மட்ட ஒரு சதவீதத்தினர்'வருமானம் நாட்டின் தொழில் வருமானத்தில் 17%.

ஆனால், இப்போது அந்த ஒரு சதவீதத்தினர் தொழில் வருமானத்தில் 43 சதவீதத்தையும் மூலதன ஆதாயங்களில் 75 சதவீதத்தையும் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். இருந்தும், 'பழம்பெரும் கட்சி'யின் அன்பையும், அதன் கொள்கை உருவாக்கத்தின் கவனத்தையும் இராஜபோகமான இந்தச் சிறிய குழுதான் பெறுகிறது.

### செல்வமும் செல்வாக்கும்

இது ஏன் நடக்கிறது? பெருஞ்செல்வம் பெரும் அரசியல் செல்வாக்கை விலைக்கு வாங்குகிறது, தேர்தல் நேரத்து நன்கொடைகளால் மட்டுமல்ல. நிபுணர்களும் ஒருசில பெரும்கொடையாளர்களிடம் சிக்கிக்கொண்டிருக்கும் ஊடகமும் ஒருங்கே இருக்கக்கூடிய ஒரு அறிவுக் கோளத்துக்குள்தான் பெரும்பாலான குடியரசுக் கட்சியினர் வசிக்கின்றனர். எனவே, சிலராதிக்கத்துக்கு நல்லது எதுவோ அதுவே அமெரிக்காவுக்கும் நல்லது என்று அவர்கள் நினைப்பதில் ஆச்சரியம் என்ன?

நான் முன்னமே கூறியது போல் இதன் விளைவுகளெல்லாம் சிலசமயம் கேலிக்குரியதாகத்தான் இருக்கும். ஆனால், நாம் நினைவில் கொள்ள வேணடிய விடயம் என்னவென்றால், அந்தக் கோளத்துக்குள் இருக்கும் நபர்களிடம் வானளாவிய அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை அவர்கள் தங்கள் புரவலர்களுக்கான ஆயுதமாகப் பயன்படுத்துவார்கள். இப்படியாக, சிலராதிக்கத்தை நோக்கிய நகர்வு தொடர்கிறது.

-நியூயோர்க் டைம்ஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியில் இருக்கும் அரசின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை குறைகிறது

## இராஜதந்திரி தயான் ஜயதிலக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு ஒன்றின் அரசாங்கத்தின் மீது இருக்கும் நம்பிக்கை வீழ்ச்சியடைந்து, அந்நாட்டில் வலுவான எதிர்க்கட்சி இல்லாத நிலையில், மேற்குலக நாடுகளினால் அப்படியான நாட்டை தோற்கடிக்க முடியும் என முன்னாள் இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் பெரும்பாலான மக்கள் வாக்களிக்காதமைக்கும், ஜெனீவா தீர்மானத்திற்கும் இடையில் தொடர்புள்ளதா என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரணமாக நாடுகளில் பொதுத் தேர்தல் அல்லாத ஏனைய தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் எண்ணிக்கையானது குறைந்தே காணப்படும்.

18 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம், அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக தேர்தலில் வெல்ல முடியவில்லை என ஒரு சிலர் கூறுகின்றனர்.

இவை அனைத்தும் இருந்தும் வடக்கில் பெருமளவிலான படையினர் இருந்தும் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது.

சரியான எதிர்க்கட்சி இருந்தால் மக்கள் வாக்களித்து அரசாங்கத்தை தோற்கடிப்பார்கள். அவ்வாறான வலுவான எதிர்க்கட்சி இல்லாத நிலையில் மக்கள் வாக்களிக்க எண்ணுவதில்லை.

நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை குறைந்து வருகிறது.

பிரதான எதிர்க்கட்சி மீதும் மக்களுக்கு தற்போது நம்பிக்கையில்லை. இந்த நிலையில் மாற்றங்கள் ஏற்படாது போனால் மக்கள் அரசியல் செயற்பாடுகளில் இருந்து தூர விலகிச் செல்ல ஆரம்பித்து விடுவார்கள்.

அப்படி நடந்தால், வெளியுலக சக்திகளால் நாட்டை இலகுவாக தோற்கடிக்க முடியும்.

மக்களை மயக்க வேண்டுமாயின் அரசாங்கம் நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். அப்படியில்லை என்றால், கவர்ச்சிகரமான, மக்கள் நலனை அடிப்படையாக கொண்ட மாற்று எதிர்க்கட்சி உருவாக வேண்டும்.

அப்படியில்லாமல் படித்த , புத்திசாலிகளான ஈழவாதிகளுடன் எப்படி சர்வதேச ரீதியில் போட்டியிடுவது என்ற கேள்வியை தான் நாம் கேட்க வேண்டும் என்றும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார். (2)



யாழ். நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் செலான் வங்கியின் சிறுவர் சந்தை ஒன்று அண்மையில் நடத்தப்பட்டபோது... (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## இரத்ததான முகாம்

வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை சிகிச்சை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே, உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்படுகின்றது. (2)

## வலம்புரி வாசகர்களிடையே நடத்தப்பட்ட உலக காசநோய் தினப்போட்டி முடிபுகள்

முதலாம் பரிசு: சர்வகுலநாதன் தயாளசோபன்- மட்டுவில் தெற்கு, சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி.

இரண்டாம் பரிசு: அ.மரியா-848/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு: யசீலன்ரேணுகா- பரமேஸ்வரி பவனம், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

மேற்படி பரிசில்களை உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துடன் மார்பு நோய் சிகிச்சை நிலையம், சுகாதாரக்கிராமம், பண்ணை, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அல்லது 021 222 7234 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு டாக்டர் ஜி.செல்வரட்ணம் கேட்டுள்ளார்.

## பெரும்போக நெல் அறுவடை குறைவால் அரிசி இறக்குமதி

### விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை பெரும்போகத்திற்கான நெல் உற்பத்தி போதியளவு இல்லாமல் பெறாமையினால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இம்முறை அதிக மழைவீழ்ச்சி கிடைக்க பெறாமையினால் இந்த பெரும்போகத்திற்கான நெல் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை பெரும்போகத்தில் 4 ஆயிரம் ஹெக்டேயர் வயலில் நெல் விதைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உரிய மழை கிடைக்காமையினால் கடந்த சிறுபோகத்தின் போது, நூற்றுக்கு 25 சதவீத நெல் விளைச்சலில் குறைவு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதன் காரணமாக விவசாயிகள் மேலதிக பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலாளர்கள் ஊடாக ஆலோசனை வழங்கியுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த வார இறுதி காலப்பகுதியினுள் நாட்டில் பல பகுதிகளிலும் மழை பெய்யக் கூடும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது. (2)

## சைக்கிள் சவாரி போட்டி குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இராணுவத்தினரும் யாழ். மாவட்ட சைக்கிளோட்டக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் சைக்கிளோட்டப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் நடைபெறும். இக் கலந்துரையாடலில் போட்டியில் பங்கேற்க விரும்பும் போட்டியாளர்களையும் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0777650965 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (2)

## இன்று ஒரு தகவல்

### ஞாபகம்

ஒரு நண்பர் யாருடனோ தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். கதைத்து முடிந்ததும் நான் அவரைப் பார்த்து, "இப்போது தொலைபேசியில் கதைத்த இலக்கம் என்ன?" என்று கேட்டேன்.

அவர் தலையை சொறிந்து கொண்டு ஞாபகம் வரவில்லை என்றார்.

"சரி சேர்! அதை விடுங்கள்... உங்கள் மனைவி பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"மாலதி" என்று கூறினார்.

"என்ன சேர் இது வேடிக்கை... சற்று நேரத்திற்கு முன்னர் கதைத்த தொலைபேசி இலக்கம் மறந்து விட்டதாக கூறினீர்கள். எப்போதோ கல்யாணம் செய்த மனைவியின் பெயரை மறக்கவில்லை. அதை சரியாகச் சொல்லி விட்டீர்கள்" என்றார்.

அவர் என்னை ஒரு மாதிரியாக பார்த்தார். அவர் அப்படி என்னை பார்த்ததிலே ஒன்றும் பிழையில்லை. ஏனென்றால்... நாம் எல்லோருமே அப்படித்தானே!

ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக தொலைபேசியில் கதைக்கிறோம். அதன்பின் கிடைக்கப் பெற வேண்டிய காரியம் முடிந்தவுடன் அந்த இலக்கம் நமக்கு அநாவசியமாகி விடும். அதனாலே மறந்து விடுகிறோம்.

இதற்குப் பெயர் தான் "தற்காலிக 'ஞாபகம்" ஆகும். அதற்காக மனைவியினுடைய பெயரை மறக்க முடியுமா... அதை அடிக்கடி உபயோகப்படுத்துகிறோம்... அதனாலே மறப்பது கடினமாக இருக்கும்.

இதற்குப் பெயர்தான் "நிரந்தர ஞாபகம்"

தற்காலிக ஞாபகம் ஒரு மின்னல் மாதிரி தோன்றி மறையும். நிரந்தர ஞாபகம் ஒரு படிவம் போல மூளையிலே படிந்து விடும்.

ஒரே சம்பவத்தின் பல பிரதிகள் மூளையிலே பல்வேறு பகுதிகளிலேயும் படிவதனாலேயே... ஒன்று மறைந்தாலும் இன்னொன்று மறைவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான் "தொண்டையிலே இருக்கிறது... வாய்க்கு வரமாட்டேன் என்கிறது" என்று கூறுவார்கள்.

ஒருவருக்கு எந்தத் துறையில் ஆர்வமும் ஈடுபாடும் அதிகமாக இருக்கிறதோ அதில் ஞாபகசக்தி அதிகமாக இருக்கும். தொலைபேசி நிலையத்தில் வேலை செய்பவருக்கு இலக்கங்கள் எல்லாம் நல்ல ஞாபகமாக இருக்கும்.

அதுமாதிரி கவிஞர்களுக்கு வார்த்தைகள் நல்ல ஞாபகமாக இருக்கும்.

ஒரு மூளை... எண்களை விட, எழுத்துக்களை விட படங்களை மிகவும் சுலபமாக ஞாபகத்தில் வைத்திருக்கும். உதாரணமாக, ஒரு பையனுக்கு படித்தது எதுவும் ஞாபகத்திலே இல்லையென்றால், அவன் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று அர்த்தம். மூளையைத் பொறுத்த வரைக்கும் ஞாபகசக்தி அதிகம் உள்ள மூளை; மறதியுள்ள மூளை அப்படியென்று ஒன்றும் கிடையாது. நினைவு வைத்துக் கொள்வதற்கு பயிற்சியளிக்கப்பட்ட மூளை, பயிற்சி அற்ற மூளை என்று சொல்லலாமா?

அதனாலே ஞாபக சக்தி என்பது நம்மிடம் இருக்கிற ஒருவகைப் பயிற்சி– எமது முயற்சியைப் பொறுத்துத் தான் அமையும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விமானம் கிடைக்கும்வரை தேடுதல் பணி தொடரும்

### மலேசிய பிரதமர்

(பேர்த்)

காணாமற்போன மலேசிய ஏர்லைன்ஸ் விமானத்தைக் கண்டுபிடிக்கும்வரை ஓய மாட்டோம் என மலேசிய பிரதமர் நஜீப் ரசாக் கூறியுள்ளார்.

தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளவர்களை சந்தித்து நிலவரங்களை கேட்டறிந்து கொள்வதற்காக பேர்த் சென்ற பிரதமர் நஜீப் ரசாக், விமானத்தில் பயணம் செய்தவர்களின் குடும்பத்தினருக்கு உறுதியான பதிலை அளிப்பதற்காக தொடர்ந்து தேடுதல் பணி நடந்து வருகிறது. விமானத்தைக் கண்டு பிடிக்கும் வரை ஓயமாட்டோம் என்று கூறினார். (2)



கிரீஸ் நாட்டில் சிக்கன நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஏதென்ஸ் போராட்டக்காரர்கள் பின்னோக்கி தள்ளியபடி முன்னேறிச் செல்லும் பாதுகாப்பு படையினரைப் படத்தில் காணலாம்.

# உக்ரைனுக்குள் ரஷ்யப்படைகள் எந்நேரத்திலும் ஊடுருவலாம்

### அச்சம் வெளியிடுகிறார் நேட்டோ தளபதி

**(சிம்பரோபோல்)**

**எந்த நேரத்திலும் உக்ரைனுக்குள் ரஷ்யா ஊடுருவக் கூடும் என நேட்டோ தளபதி அச்சம் தெரிவித்துள்ளார்.**

உக்ரைனிலிருந்து பிரிந்து ரஷ்யாவுடன் இணைவதற்கான தங்களது விருப்பத்தினை ஒரு வாக்கெடுப்பின் மூலம் தெரிவித்த கிரிமியாவை உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

கடந்த மாதம் 21 ஆம் திகதியன்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது கையெழுத்தின் மூலம் இந்த இணைப்பினை உறுதி செய்தார்.

இதனையடுத்து, ரஷ்யாவில் நடைபெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த ஜி-8 எனப்படும் வளர்ந்த நாடுகளின் கூட்டமைப்பு கூட்டம் சில நாட்கள் முன்னதாகவே, கடந்த வாரம் பெல்ஜியம் தலைநகர் புருசெல்ஸில் நடைபெற்றது. ஜி-8 கூட்டமைப்பில் இருந்து ரஷ்யா நீக்கப்பட்டதாக இந்த கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கிரிமியா பகுதியுடன் தரைவழி தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வசதியாக உக்ரைனுக்குள் எந்நேரமும் ரஷ்யப் படைகள் ஊடுருவக்கூடும் என ஐரோப்பிய நாடுகளுக்கான அமெரிக்காவை சேர்ந்த நேட்டோ படையின் தளபதி தற்போது அச்சம் தெரிவித்துள்ளார்.



உக்ரைன் எல்லைப் பகுதியில் இதற்காக சுமார் 40 ஆயிரம் வீரர்களை தயார் நிலையில் ரஷ்யா குவித்து வைத்திருப்பதை மேற்கோள் காட்டியுள்ள ஐரோப்பிய நாடுகளுக்கான நேட்டோ படையின் தளபதி பிலிப் ப்ரீட்லோவ், அளவுக்கு மிஞ்சிய அதிகமான படைகளை குவித்து வைத்துள்ள ரஷ்யா, இன்னும் 3 அல்லது 5 நாட்களுக்குள் முழு வீச்சில் உக்ரைனுக்குள் ஊடுருவ தயார் நிலையில் உள்ளது போல் தோன்றுகிறது என்று அச்சம் தெரிவித்துள்ளார். (2)

## குண்டுத்தாக்குதலில் மயிரிழையில் உயிர்தப்பினார் முஷாரப்

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை குறிவைத்து மிகப் பெரிய குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆனால் அதிர்ஷ்டவசமாக, முஷாரப் எந்தவித காயமும் இன்றி உயிர்தப்பினார்.

இச் சம்பவம் நேற்றையதினம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இடம்பெற்றது.

இந்த குண்டுவெடிப்பை நிகழ்த்தியது யார்? என்ன காரணம் என்பது குறித்து எதுவும் இன்னும் அறியப்படவில்லை.

பாக்., ஜனாதிபதியாக இருந்து அனைவரையும் ஆட்டிப்படைத்தவர் முஷாரப். தேர்தலில் படு தோல்வி அடைந்ததால் நாட்டில் இருந்து வெளியேறினார்.

இவர் ஆட்சி காலத்தில் நீதிபதிகள் கூட கைது செய்யப்பட்டனர். இவர் மீது கொலை மற்றும் சதி, தேச துரோக வழக்குகள் பதியப்பட்டு கைது செய்யப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை முஷாரப் மீது தேசத்துரோக குற்றச்சாட்டை நீதிமன்றம் சுமத்தியது. இந்த குற்றத்திற்காக அவருக்கு அதிக பட்சமாக மரணதண்டனை கூட விதிக்கப்படலாம். இந் நிலையில் இஸ்லாமாபாத்தில் அவரது பண்ணை வீட்டுக்கு சென்று கொண்டிருந்தபோது கான்வாய் பாதையில் பலத்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் முஷாரப்புக்கு எவ்வித காயமும் இல்லை.

இந்த குண்டு வெடிப்பை நிகழ்த்தியது யார்? என்ன காரணம் என்பது குறித்து எதுவும் இன்னும் அறியப்படவில்லை. மனித வெடி குண்டு வெடித்ததாகவும் கூறப்படுகிறது. (2)

## நெருப்பாற்றில் நீந்தி வந்த சிங்கம் ஜெயலலிதா

### பிரசார கூட்டத்தில் மதுரை ஆதீனம் புகழாரம்



(நாகர்கோவில்)

இந்திய நாட்டை வல்லரசாக்க ஜெயலலிதாவினால் மட்டும் முடியும். அவர் முதலமைச்சர் மட்டுமல்ல; நெருப்பாற்றில் நீந்தி வந்த சிங்கம். அவரை விட்டால் உலகத்திற்கு வேறு நாதியே இல்லை. தமிழ், ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், இந்தி என பன்மொழி பேசும் தலைவி ஆவார். அவரைப்போல் கருணை உள்ளம் படைத்தவரை பார்க்க முடியாது என மதுரை ஆதீனம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் ஜான்தங்கத்தை ஆதரித்து நாகர்கோவில் வடிவீஸ்வரத்தில் பொதுக் கூட்டம் நடந்தது.

இக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மதுரை ஆதீனம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்திய நாட்டை வல்லரசாக்க ஜெயலலிதாவால் தான் முடியும். புனித ஜார்ஜ் கோட்டை எக்ஸ்பிரஸ் ரயிலை எம்.ஜி.ஆர். 3 முறை செலுத்தினார். அதன்பிறகு ஜெயலலிதா 3 ஆவது முறையாக ரயிலை செலுத்தி வருகிறார். 2014 பாராளுமன்ற தேர்தல் முடிந்த ம், ஜெயலலிதா செங்கோட்டை எக்ஸ்பிரஸ் ரெயிலை செலுத்தப் போகிறார். அதற்கு பச்சைக் கொடி காட்டப் போகிறவர்கள் தமிழகம் மற்றும் புதுச்சேரி மக்கள்.

அவர் முதலமைச்சர் மட்டுமல்ல, நெருப்பாற்றில் நீந்தி வந்த சிங்கம். அவரை விட்டால் உலகத்துக்கு வேறு நாதியே இல்லை. தமிழ், ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, மலையாளம், இந்தி என பன்மொழி பேசும் தலைவி ஆவார். அவரைப் போல் கருணை உள்ளம் படைத்தவரை பார்க்க முடியாது.

நாடு நலம் பெற வேண்டும் என்ற அக்கறையோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அனைத்து துறைகளிலும் தமிழகம் முன்னேற வேண்டும் என்பதற்காக இரவை பகலாக்கி உழைக்கிறார். ஈழத் தமிழர் நல்வாழ்வுக்காக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியவர் ஜெயலலிதா.

இந்தியாவில் ஓடும் நதிகளை தேசியமயமாக்க வேண்டும் என்றால் ஜெயலலிதாவால் மட்டுமே முடியும். பயங்கரவாதம், தீவிரவாதம் ஒழிய வேண்டும் என்றால், பெற்றோல்-டீசல் விலை குறைய வேண்டும் என்றால் ஜெயலலிதா பிரதமராக வேண்டும். இவ்வாறு மதுரை ஆதீனம் கூறியுள்ளார். (2)

## இரண்டுவிதமான கருத்துக்களைக்கூறி நாராயணசாமி மக்களை திசைதிருப்புகிறார்

### அ.தி.மு.க. செயலாளர் அன்பழகன் குற்றச்சாட்டு

(புதுச்சேரி)

இலங்கை பிரச்சினையில், மத்திய அமைச்சர் நாராயணசாமி, இரண்டு விதமான கருத்துக்களை கூறி, மக்களை திசை திருப்புகிறார் என, புதுச்சேரி அ.தி.மு.க., செயலாளர் அன்பழகன் எம்.எல்.ஏ., தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கைக்கு தமிழர் பிரச்சினையில், ஐ.நா. வாக்கெடுப்பில், இந்தியா பங்கேற்காமல் புறக்கணித்தது, துரதிர்ஷ்டவசமானது இலங்கைத் தமிழர்களுக்கு, காங்., கட்சி துணை நிற்கும் என இருவிதமான கருத்துக்களைக் கூறி, மத்திய அமைச்சர் நாராயணசாமி மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறார்.

மத்திய அமைச்சரவை கூட்டத்தில், இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக காங்., எடுத்த முடிவை, திசை திருப்பி, வாக்குகளைப் பெறுவதற்காக, மத்திய அமைச்சர் இதுபோல் ஏமாற்றி வருகிறார்.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும், மத்திய அமைச்சர், மத்திய அரசின் முடிவை எதிர்ப்பது வேடிக்கையாகவுள்ளது. தமிழகர்களுக்கு துரோகம் இழைக்கும் முடிவை மத்திய அரசு எடுத்தால், நாராயணசாமி தனது பதவியை இராஜினாமா செய்திருக்க வேண்டும்.

அதைவிடுத்து மக்களை ஏமாற்றக் கூடாது எனவும் இதற்கு, மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர் என அவர் கூறியுள்ளார். (2)

## அமெ.இராணுவத்தளத்தில் துப்பாக்கி சூடு - 4 பேர் பலி

(ஹூஸ்டன்)

அமெரிக்காவில் இராணுவ தளத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 4 பேர் பலியானதுடன் 14 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு அரசு தரப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

போர்ட் ஹூட் இராணுவ தளத்தில் மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டுள்ளார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பொலிசாரும் துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கி சூட்டில் துப்பாக்கி சூடு நடத்தியவன் உட்பட 4 பேர் பலியாகினர். 14 பேர் காயம் அடைந்துள்ளனர்.

காயம் அடைந்தவர்கள் அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ தளத்தில் துப்பாக்கி சூடு நடந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த துப்பாக்கி சூடு சம்பவத்திற்கு அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

க.பொ.த (சா/த) பரீட்சை -2013 பெறுபேறுகள் பரீட்சை திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.இப் பரீட்சையில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.அதன் விபரம் வருமாறு,

**யா/நெல்லியடி மத்திய கல்லூரி**

**ஆங்கிலமொழி மூலம்**

ம.துஷிதா-8ஏ,சி, லி.ஜெயசுதா-8ஏ,சி, சு.வைஷ்ணவி- 8ஏ,சி, ந.துளசிகன் - 8ஏ,எஸ், பு.அனோஜா- 7ஏ,பி,சி, ஜோ.ஹம்சத்வனி- 7ஏ,2சி

**தமிழ்மொழிமூலம்**

வி.தனன்-9ஏ, லோ.விதுர்ஷா- 9ஏ, நே.உஜானா- 9ஏ, கி.அபிநயன்-8ஏ,பி, பி.அநிந்திதை- 8ஏ,பி, தே.கலைமகள்-8ஏ,பி, பா.வினித்குமார்-7ஏ,2பி, சு.ஆர்த்தியாயினி- 7ஏ,பி,சி, சி.விதுஷன்- 7ஏ,பி,சி, ர.சம்யா-7ஏ,பி,சி, கு.கிருஷாந்- 6ஏ,2பி,எஸ், ல.கீர்த்திகா- 6ஏ,2பி,சி.

**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**

த.யேவேந்தன்- 4ஏ,3பி,சி,எஸ், அ.சுமிர்தராஜ்-2ஏ,3பி,4சி, செ.நவயுகன்- 2ஏ,2பி,சி,4எஸ்.

**கிளி/விவேகானந்த வித்தியாலயம்**

ஜெ.கீர்த்திகா- 5ஏ,2பி,சி,எஸ், சி.நிவேதனா-- வ.திவியா-ஏ,2பி,3சி,2எஸ், சி.மதிவதனா-ஏ,பி,4சி,2எஸ்.

**வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகள்**

**பண்டாரிகுளம் விபுலானந்தாக் கல்லூரி**

த.றேனுஜன்- 9ஏ, டினுஜன்-8ஏ,சி, அபிராஜ்- 8ஏ,சி, லதீபன்- 8ஏ,சி, யதுஷா-8ஏ,சி.

**அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தி.**

சி.சுகுணகௌரி-5ஏ,3பி,சி.

**தாண்டிக்குளம் பிறமண்டு வித்தி.**

எஸ்.பிரியங்கா- 5ஏ,3சி,எஸ், எம்.திவ்யா- 5ஏ,2பி,சி,எஸ்.

**வீரபுரம் மணிவாசகர் மகா வித்தி.**

ஜெ.லிபிஸ் கிருஷாந்- 5ஏ,3பி,எஸ்.

**தாலிக்குளம் அ.த.க. பாடசாலை**

நிலந்தனா-6ஏ,3பி,எஸ், நிராந்தன்-5ஏ,3பி,சி.

**குருக்கள் புதுக்குளம் அ.த.க பாடசாலை**

தர்மசீலன்-5ஏ,2பி,சி,எஸ், நிமல்டா-4ஏ,பி,2சி,எஸ், நிரோஜா-3ஏ,பி,2சி,2எஸ், சிவலோஜன்-2ஏ,பி,3சி,2எஸ்.

**இலங்கை திருச்சபை த.க பாடசாலை**

நா.ஞானப்பிரகாஸ்-8ஏ,பி, நா.சிலோஜன்-5ஏ,3பி,சி, க.விபிஷா-4ஏ,3பி,2சி.

**பூவரசங்குளம் மகா வித்தியாலயம்**

துஷ்யந்தன்-8ஏ,எஸ்

**மூன்றுமுறிப்பு அ.த.க. பாடசாலை**

சாயிதர்சினி-8ஏ,சி, சனுஜா-7ஏ,2பி.

**அல் இக்பால் முஸ்லிம் மகா வித்தி.**

றஷாத்-3ஏ,3பி,2சி, எஸ்

**சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தி.**

சுஜீபா-6ஏ,2சி,எஸ், திராட்சனா-5ஏ,3பி,சி

**இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.**

சி.லக்ஸ்மினி-9ஏ

**கணேசபுரம் விநாயகர் வித்தி.**

நிஷாந்தி-2ஏ,4பி,2சி,எஸ்

**பூந்தோட்டம் மகா வித்தி.**

ஜெ.ஜெய்சாந்-7ஏ,பி,எஸ், த.கீர்த்திலன்- 6ஏ,2பி,சி, க.டிலக்சன்-5ஏ,2சி,2எஸ், க.சுபாஸ்பிரதீப்- 5ஏ,2சி,2எஸ்

**பாவற்குளம் கணேசுவரா மகா வித்தி.**

மைதிலி- 3ஏ,பி,2சி,3எஸ் (266-271)

**யா/ மகாஜனா கல்லூரி**

**ஆங்கிலமொழிமூலம்**

ம.தரண்யா- 8ஏ,பி, பா.அனா-5ஏ,4பி

**தமிழ்மொழி மூலம்**

சு.சோபிகா-9ஏ,தே.கோகுலன்- 8ஏ,சி, த.சாரங்கன்-7ஏ,பி,சி, நி.கஜானன்-7ஏ,பி,எஸ், ந.அபிராமி-6ஏ,3பி, ம.சிந்துஜா-6ஏ,2பி,எஸ்,சி.சாளினி-6ஏ,பி,2சி, ம.பிறைசூடன்-5ஏ,2பி,2சி, க.கபிலன்-5ஏ,2பி,2சி,வ.ஸ்டலின்-5ஏ,2பி,சி, க.குகவர்மன்-5ஏ,4சி

**யா/வட்டு இந்துக் கல்லூரி**

**ஆங்கிலமொழி மூலம்**

பி.ரிசிகாந்தி- 9ஏ, ம.யசோதை-5ஏ, 3பி,சி.

**தமிழ்மொழி மூலம்**

கா.கீர்த்திகா -7ஏ,பி,சி, இ.வினோதினி-5ஏ,3பி,சி.

# தேவையற்ற வெளிநாட்டு தலையீடுகள் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியும் என்பதை அரசாங்கம் உறுதியாக நம்புகின்றது என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனத்துவ கடும்போக்குவாதங்கள் முற்றுமுழுதாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

சங்கள பௌத்த, தமிழ் அல்லது முஸ்லிம் பயங்கரவாதத்தை ஏற்றுக கொள்ள முடியாது. இலங்கை தேசிய அடையாளங்களுடன் கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியமானது.

தேவையற்ற வெளிநாட்டு தலையீடுகள் கடும்போக்குவாத்தை போசிக்குமே தவிர, இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

உலகின் மிகவும் பயங்கரமான பயங்கர வாத அமைப்பு ஒன்றை இல்லாதொழித்த நாடு என்ற வகையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போதியளவு கால அவகாசம் வழாங் கப்பட வேண்டியது அவசியமானது.

தமது கட்சியான லங்கா சமசமாஜ கட்சி சிறுபான்மையின மக்களின உரிமைகளுக்காக என்றும் குரல் கொடுத்து வந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### இளையதம்பி கந்தசாமி

அளவெட்டி தெற்கு அளவெட்டி அருவம்பற்றை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கந்தசாமி நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### முருகேசு அரியபுத்திரர்

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் மேற்கு திக்கத்தில் தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அரியபுத்திரர் (இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர் பிரதேச செயலகம்,கரவெட்டி) கடந்த முதலாம் ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திக்கம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### பாலசுப்ரமணியம் குமாரஸ்ரீதரன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்ரமணியம் குமாரஸ்ரீதரன் கடந்த 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு Oshwal Mahajanwadi 1, Campbell Road, Croydon Surrey, CRO 2SQ UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பரிபூரணநாதன் பரமேஸ்வரி

அல்வாய் தெற்கு ஓடையைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரிபூரணநாதன் பரமேஸ்வரி கடந்த முதலாம் ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு அவரது மருமகன் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி குணரத்னம் புவனேஸ்வரி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, நார்த்யார்க் (கனடா) ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட குணரத்னம் புவனேஸ்வரி கடந்த முதலாம் ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# தேசப்பற்று பிரசாரத்தின் மூலம் சிங்கள மக்களை ஏமாற்றிவிட முடியாது

## விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

***எல்லா நேரத்திலும் மக்களை ஏமாற்றிவிட முடியாது என கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.***

அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாணசபைத் தேர்தல் முடிவுகள், அரசாங்கத்தின் மீதான மக்கள் அதிருப்தியை மக்கள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லாக் காலங்களிலும் தேசப்பற்று பிரசாரத்தின் மூலம் சிங்களப் பெரும்பான்மை மக்களை ஏமாற்றி திசை திருப்ப முடியாது என்ற செய்தி தேர்தல் முடிவுகளின் மூலம் ஆளும கட்சிக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளின் தீர்மானத்தினை அடிப்படையாகக் கொண்டு வாக்குகளை சுவீகரிக்க முடியும் என ஆளும்கட்சி போட்ட கணக்கு, இம்முறை தேர்தலில் பிழைத்து விட்டது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை தீர்மானது ஆளும்கட்சியின் வாக்குகள் அதிகரிக்க ஏதுவாக அமைந்தது என்பதனை மறுப்பதற்கில்லை.

அமர்வுகள் நடைபெற்றிருக்காவிட்டால் ஆளும் கட்சி மேலும் பாரிய தோல்வியை சந்தித்திருக்க நேரிட்டிருக்கும். எவ்வாறெனினும், அரசாங்கத்திற்கு பதிலீடாக மக்களினால் தெரிவு செய்யப்பட்ட கட்சிகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது.

வெற்றியீட்டிய ஜே.வி.பி.மற்றும் ஜனநாயக் கட்சி ஆகிய இரண்டுமே அதிகாரப் பகிர்விற்கு எதிரான கட்சிகள்.

இந்த இரண்டு கட்சிகளுமே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு ஆதரவளிக்கவில்லை.

நாட்டில் சிறுபான்மை கட்சிகளுக்காக குரல் கொடுக்கும் கட்சிகளுக்கான வாக்குகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# பயங்கரவாதிகளின் சொத்துக்களை அரசுடைமையாக்க அரசாங்கம் முயற்சி

## வர்த்தமானி அறிவித்தல் விரைவில்

(கொழும்பு)

பயங்கரவாதிகளுக்கு சொந்தமான சொத்துக்களை அரசுடைமையாக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இது தொடர்பான விசேட உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புப் பேரவையின் ஆயிரத்து 373 பிரகடனத்தின் அடிப்படையில் அரசு இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய அமைப்புக்களுக்கு சொந்தமான சொத்துக்களை அரசுடைமையாக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது.

பயங்கரவாதிகளையும், பயங்கரவாத அமைப்புக்களையும் கண்டறியும் விசேட அதிகாரம் பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய விடம் வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்புக்களுடன தொடர் புகளைப் பேணி வரும் அமைப்புக்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்களின் முடிவுகள் ஐ.நா.தீர்மானத்தையா பிரதிபலிக்கின்றன?

## கேள்வியெழுப்புகின்றார் அசாத் சாலி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு மக்கள் எச்சரிக்கை சமிக்ஞை விடுத்துள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

ஜெனீவா பிரச்சினையையும், மின்சார நாற்காலியையும் காட்டி அரசாங்கம வாக்கு வேட்டையில் ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த மேல் மற்றும் தென்மாகாணசபைத் தேர்தல்களின் முடிவுகள் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை தீர்மானத்தையா பிரதிபலிக்கின்றது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆதரவாக 23நாடுகள் வாக்களித்ததுடன் எதிராக 12 நாடுகளும, 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை எனவும் அரசாங்கம் தெரிவிததிருந்தது.

இதன்படி பெரும்பான்மையான உறுப்பு நாடுகள தீர்மானத்திற்கு ஆதரவளிக்கவில்லை எனவும் இது அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும் எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

எனவே, அமைச்சரின் வாதத்தை மேல் மற்றும்தென்மாகாண சபைத் தேர்தலில் பிரயோகித்தால் அரசாங்கம் பாரிய பின்னடைவையே சந்தித்துள்ளது. எதிராக வாக்களித்தவர்கள் மற்றும் வாக்களிப்பில் பங்கேற்காதவர்களின் எண்ணிக்கை, ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்களின் எண்ணிக்கையை விடவும் மிக அதிகமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் எங்கு கணிதபாடம் கற்றுக் கொண்டார் எனத் தெரிந்தால தாமும் அங்கு சென்று கற்றுக் கொள்ள முடியும். அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிராக மக்கள் வாக்களித்துள்னர்.

அனைத்து எதிர்க் கட்சிகளும்ஒன்றிணைந்தால் அரசாங்கத்திற்கு முடிவு கட்ட முடியும் என்பதை எதிரக கட்சிகள் உணர்ந்து கொண்டுள்ளதாகவும தெரிவித்துள்ளார்.(2)

# முறைப்பாடு செய்யப்பட்டால் பொன்சேகா குறித்து விசாரணை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முறைப்பாடு செய்யப்பட்டால் ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். சரத் பொன்சேகா அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்திருந்தார்.

இவ்வாறு தேர்தலில் வாக்களித்தமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டால் தேர்தல் திணைக்களம் அது குறித்து வசாரணை நடத்தும். சிவில் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் சரத் பொன்சேகா வாக்களிப்பில் பங்கேற்றதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் இது குறித்து இதுவரையில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

என்னை எவரேனும் வைக்கோல் பொம்மையாக சித்திரித்தால் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றேன.

இறந்த பிணமொன்றை விடவும் வைக்கோல் பொம்மைக்கு அதிகாரம் அதிகமாகும்.

அரசியல் வாதி என்ற மிருகங்களிடமிருந்து, மக்கள் என்ற பயிர்களை காப்பாற்றும் வைக்கோல பொம்மையாக செயற்படுகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா வைக்கோல் பொம்மையாக தேர்தல ஆணையாளரை சித்திரித்திருந்தமை மற்றும் வாக்களிப்பில் பங்கேற்றமை தொடர்பில் செய்தியாளர்கள எழுப்பிய கேள்விகளுக்கே அவர் மேற்கண்டவாறு இந்த பதில்களை அளித்திருந்தார். (2)

# அமெரிக்காவின் பிரேரணைப்படியே 16 அமைப்புக்களுக்கு தடைவிதிப்பு

## பழிவாங்கலல்ல என்கிறார் இராணுவப் பேச்சாளர்

பயங்கரவாதசெயறபாடுகளில் ஈடுபடும் அல்லது பயங்கரவாத செயற்பாடுகளுக்கு உதவி செய்யும் 16 அமைப்புக்களை தடைசெய்தமையானது பழிவாங்கும் நோக்கத்தை கொண்டதல்ல என்று பாதுகாப்பு அமைச்சின் ஊடக பேச்சாளர், பிரிகேடியர்ருவான்வணிகசூரிய தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் பிரிகேடியர் ருவான் பங்கேற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜெனீவா வாக்கெடுப்பின் எதிரொலியாக பழிவாங்கும் நோக்குடன் இவ்வாறு தடை செய்யப்பட்டதாக சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. அது உண்மைக்கு புறம்பானது. அவற்றில் எந்தவித உண்மையும் கிடையாது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் 2001 ஆம் ஆண்டு அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட 1373 என்ற இலக்கமுடைய பிரேரணையின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே பாதுகாப்பு அமைச்சும, வெளிவ்வகார அமைச்சும் இணைந்து 16 அமைப்புக்களையும் தடை செய்ததே தவிர, சிலர்தவறாகநினைப்பது போல ஜெனீவா வாக்கெடுப்புக்கு பழிவாங்கும் வகையில் அவசரமாக செய்த ஒரு விடயமல்ல.

ஏனெனில் சர்வதேச சட்டமொன்றை நாம் நினைத்தவுடன் ஒரே நாளில் நடைமுறைப்படுத்தவோ, மாற்றவோ முடியாது என்றார்.

தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் தொடர்புடைய கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளும் இதனைக் கடைப்பிடிக்குமா என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் இலங்கை அரசின் இந்த தீர்மானத்தை அவர்கள் அங்கீகரிப்பர்கள் என்று நாங்கள நம்புகின்றோம் என்றார். (2)

# தமிழ் அமைப்புக்கள் மீதான அரசின் தடை மனிதவுரிமை செயற்பாட்டாளர்களை பாதிக்கும்

## சர்வதேச மன்னிப்புச்சபை எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என சர்வதேச மன்னிப்புச்சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தன்னார்வத் தொண்டர்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகிய தரப்பினர் இலங்கையில் நெருககடிகளை எதிர் நோக்க நேரிடலாம் என சர்வதேச மன்னிப்புச் சபையின ஜெனீவா பிரதிநிதி பீற்றர் ஸ்பிலின்டர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு எதிரான தடை உள்ளிட்ட சில நடவடிக்கைகள் மனிதவுரிமை செயற்பாட்டாளர்களை மோசமாக பாதிக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் நேரடியாக பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ்நடத்தப்படக் கூடிய அபாயம் நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும அடக்குமுறைகளானது சாட்சியாளர்கள் சர்வதேச விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்ற வலுவான செய்தியை சொல்லும் வகையில் அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் 26ஆம் அமர்வுகளில், இலங்கை குறித்த வாய்மொழிமூல அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. புலம்பெயர் தமிழர்களின உறவினர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் நெருக்கடிகளை எதிர்நோக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஸ்பிலின்டர் தெரிவித்துள்ளார். (2)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பொன்ராசா இரத்தினாதேவி



பிறப்பு 17.05.1941 இறப்பு 27.03.2012

திதி:-04.04.2014

ஆண்டிரண்டு ஆனபோதும் ஆறவில்லை எம்மனது
தூண்டு சுடரொளியாய் எமைக்காத்து வாழ்ந்தவரே
ஆண்டவன் தாள் சேர்ந்திட்ட அன்புருவானவரே
நீண்ட வழி நோக்கி நித்தமும் ஏங்குகின்றோம்.

செல்வவாசம்
வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(6040)

தகவல்:
செ.பொன்ராசா
(கணவர்)



## 31 ஆம் நாள் நினைவுதினம்



கடந்த 05.03.2014 புதன்கிழமை அன்று
அமரத்துவமடைந்த எங்கள் குலவிளக்கு
அமரர் திருமதி. கதிரவேலு
பார்வதி

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 04.04.2014 வெள்ளிக்கிழமை இன்று காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பு டன் அழைக்கின்றோம்.

(6054)

இலந்தைக்காடு,
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்
அழகையா.குடும்பத்தினர்.



## 5ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



தோற்றம் 23.04.1978 மறைவு 31.03.2009

அமரர் செல்வி இராகினி கதிர்காமத்தம்பி

(ஆசிரியை,வ/திருஞான சம்பந்தர் வித்தியாலயம் வவுனியா)

திதி: பூர்வபக்க பஞ்சமி

மகளே! இராகினி!
பாலகியாய் மடிதவழ்ந்தாய்
பார்த்து மகிழ்ந்திருந்தோம்
ஆலமரமாகி அரவணைப்பாய்
என்றிருந்தோம்...
ஆலமுண்ட கண்டன் பாதம்
அவசரமாய் சென்று விட்டாய்
வாழும் வயதிருக்க எம்மை
வாட வைத்துச்சென்றுவிட்டாய்
பாழும் இவ்வுலகில் நாம்
நடைப்பிணமாய் வாழுகின்றோம்!
எம் அழுகுரல் கேட்கின்றதா?
மறு பிறப்புண்டால்...
எம் கையில் தவழ்ந்து விடு!
தீபம் ஏற்றி வணங்குகின்றோம்
உந்தன் நினைவுடனே வாழ்கின்றோம்

குடும்பத்தினர்
நாகப்பாவளவு- கொற்றாவத்தை
வல்வெட்டித்துறை.

(ச-6861)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலாக நேர்வழியில் வாழ்ந்தால் பிரச்சினைகளும் கவலைகளும் மட்டுமல்ல; எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள். –நேருஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உலகின் சிறந்த தலைவர்களின் பண்புகளைக் கற்றுக் கொள்ளுங்கள்

ஒரு காலத்தில் தலைவர்கள் பிறப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் பின்னாளில் தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்றால் எங்கள் மத்தியில் நல்ல தலைவர்கள் உருவாகாமல்– உருவாக்கப்படாமல் போனது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

ஆக, தலைவர்கள் பிறக்கிறார்கள் என்ற கருத்தே ஏற்புடையது என்பது நம் தாழ்மையான கருத்து. இதை நாம் கூறும்போது; முகாமைத்துவ சிந்தனைகள் உச்சம் பெற்ற இன்றைய காலகட்டத்தில், இவ்வாறான கருத்துக்கள் ஒவ்வாது என்று கூறுவோரும் இருக்கவே செய்வர்.

என்ன செய்வது! இரண்டு பஞ்சாங்கப் பண்பாட்டில், வாழ்கின்ற நாம் இருநிலைக் கருத்துக்களைக் கொண்டிருப்பது பிழையென்று வாதிடமுடியாதல்லவா? ஆகையால், தலைவர்கள் பிறக்கிறார்கள் என்ற நம் வாதம் இன்று ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும் இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளின் பின் இந்தக் கருத்துக் குறித்து உலகம் ஆராயவரம் என்பதால் அதனை இங்கு பதிவு செய்வது பொருத்த முடையது எனக் கருதுகிறோம்.

தலைவர்கள் பிறப்பதாக அல்லது உருவாக்கப்படுவதாகக் கூறுகின்ற வேளையில், உலகம் போற்றும்தலைவர்கள் என்ற வரிசைப்பட்டியலில் உள்ளடங்கும் தலைவர்களின் பண்புடைமை என்பது வித்தியாசமானதாக இருந்தது என்பதைச் சொல்லித்தானாக வேண்டும்.

இந்திய தேசத்திற்கு விடுதலை பெற்றுக் கொடுத்த அண்ணல் காந்தி அடிகளைக் கோட்சே என்பான் சுட்டுக் கொல்கிறான். காந்தியடிகள் தன் உயிர் பிரிகின்றவேளையிலும் தன்னைச் சுட்டவனை எதுவும் செய்யாதீர்கள் என்று கூறுவதனூடாக மன்னிப்பின் பெருந்தன்மையை வெளிப்படுத்துகிறார். இங்குதான் மகாத்மா காந்தியின் தலைமைப் பண்பு போற்றுதலுக்குரியதாகின்றது.

ஒருமுறை பேரறிஞர் அண்ணாதுரை அவர்கள் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார். காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் ஒருவரின் மகன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்திருந்தார்.

அந்த விண்ணப்பத்தை பரிசீலித்த அறிஞர் அண்ணா அவரை வேட்பாளராக்க வேண்டாமென்றார். கட்சிக்காரர்கள் விடுவதாக இல்லை. அவர்கள்; அறிஞர் அண்ணாவைப் பார்த்து இவரை வேட்பாளராக்கினால் நிச்சயம் எங்களுக்கு வெற்றி என்றனர்.

அதற்குப் பதிலளித்த அறிஞர் அண்ணா "அது எனக்கும் தெரியும் ஆனால், நாங்கள் அவருக்கு சந்தர்ப்பம் கொடுத்து தந்தை–மகன் என்ற புனித உறவை பங்கப்படுத்தி விடக்கூடாது. நாங்கள் சந்தர்ப்பம் கொடுத்தால், தந்தையும் மகனும் மோதிக் கொள்வர். இது நல்லதா?" என்று கேட்டார். தி.மு.க தொண்டர்கள் தலைகுனிந்தனர்.

அறிஞர் அண்ணாவின் இந்த மனித நேயப் பண்பு அரசியல் என்ற எல்லை கடந்தது. இத்தகைய பெருந்தன்மைகளை நம் அரசியல் தலைவர்களும் கற்றுக் கொள்ளவேண்டும்.

சுகாதாரப் பரிசோதகர் ஒருவருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி ஒருவருக்கும் இடையே அண்மையில் நிர்வாக முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இந்த முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்கு முற்படாமல் வலிகாமம் வடக்கு பிரதேச சபை சுகாதார வைத்திய அதிகாரிக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியது. இதிலிருந்து எங்கள் நிலைமை எப்படியாகப் போகிறது என்பது தெளிவாகிறதல்லவா?

சுகாதாரப் பரிசோதகருக்கும் வைத்திய அதிகாரிக்கும் இடையில் நிர்வாக முரண்பாடு எனில், அதனைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதே தலைமைப் பண்பாகும். இதைவிடுத்து வைத்திய அதிகாரிக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றுவது அர்த்தமற்றது.

இத்தகையதொரு தீர்மானம் பொது சுகாதாரப் பரிசோதகருக்கு எதிராகவும் எடுக்கக் கூடாது என்பதே நம் கருத்து.

இத்தகைய தீர்மானங்களை எடுக்கும் போது அது– சுகாதார சேவையில் இணைந்து செயற்படவேண்டியவர்களிடையே கருத்து முரண்பாட்டை ஏற்படுத்தும். அதன் பின்பு சுகாதார சேவையில் முன்னேற்றம் ஏற்படும் என்பதை இம்மியும் எதிர்பார்க்க முடியாது.

அதேநேரம் விசுவாசத்தோடு சேவை ஆற்றுவோர் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை நாம் முன்வைக்கும் போது அது நாளை நமக்கும் உரியதாகும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

ஏன்? சிலவேளைகளில் சுகாதாரப் பரிசோதர்களுக்கே இவ்வாறானதொரு நிலைமை ஏற்படலாமல்லவா? ஆகையால் எதனையும் சுமுகமாக, அமைதியாக, ஒற்றுமையாக அணுகவேண்டும். அதுவே ஆரோக்கியமானது என்பதுடன் நல்ல தலைமைத்துவத்துக்கான பண்புமாகும்.

# மனிதன் மரணிக்கும்வரை கல்வியை தொடர வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நவீன தகவல் தொழில்நுட்பக் கல்வியை கற்பதற்காக எதிர்வரும 7 ஆம் திகதி திங்கட்கிழமை ஒரு மாத கால பயணத்தை மேற்கொண்டு அமெரிக்கா செல்கின்றார்.

மனிதன் மரணிக்கும் வரை கல்வியை கற்க வேண்டும். அப்போது தான் நவீன உலகின் மாற்றங்களை உள்வாங்க் முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹவ்லொக் வீதியிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இத்தகவலை வெளியிட்டார்.

இங்கு ஊடகவியலாளர்களிடம் மேலும் கருத்துக்களை தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,

உலகின் தலைசிறந்த 5 பல்கலைக் கழகங்களில் ஒன்றான மெசிடோசியஸ் இனஸ்டியுட் ஒப் டெக்னோலஜி என்னை அங்கு வருமாறும் சொற்பொழிவுகளை நிகழ்த்த வேண்டுமென்றும் மார்ச் மாதத்தில் அழைப்பு விடுத்தது.

ஆனால் ஜெனிவாவில் இலங்கை தொடர்பான பிரச்சினை முடியும் வரை வெளிநாடுகளுக்கு விஜயம் செய்வதை தவிர்த்துக்கொண்டுள்ளதாக அவர்களுக்கு அறிவித்தேன். இதற்கமைய தற்போது மீண்டும் எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பல்கலைக்கழகத்தில் நவீன தொழில் நுட்பம், நனோ தொழில் நுட்பம், நவீன விவசாய முறைமைகள், புதிய பொருளாதார கொள்கைகளை கற்க முடியும்.

எனவே அங்கு செல்வதன் மூலம் பொருளியல் நிபுணர்கள் உட்பட பல் வேறுபட்ட புத்திஜீவிகளுடன் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடிவதோடு புதிய வழிமுறைகளை யும் கற்க முடியும்.

எதிர்காலத்தில் ஐ.தே.கட்சி ஆட்சியில் இவ்வாறு பெறப்படும் கருத்துக்களை உள்வாங்கி நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கான கொள்கைகளை வகுக்க முடியும். அரசியலமைப்பை மாற்றும் போது இக்கருத்துக்களை உள்வாங்க முடியும்.

அரசியலுக்கு அப்பால் சென்று கற்க வேண்டிய விடயங்கள் பல உள்ளன. அது தொடர்பாக அதிக கவனம் செலுத்துவேன்.

அதுவரை கட்சி நடவடிக்கைகளை தலைமைத்துவச் சபை முன்னெடுத்துச் செல்லும். ஒரு மாதம் கழித்தே நாடு திரும்புவேன் என்றார். (2)

## பலமான எதிர்க்கட்சியை உருவாக்க த.தே. கூட்டமைப்புடன் பேசுவோம்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

2015ஆம் ஆண்டில் இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்துமாறு எதிர்க்கட்சி வலியுறுத்தும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டிய காலம் வந்துள்ளது.

இந்த நிலையில் பலமான எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. போன்ற எதிர்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் தொடர்பில் கேள்வி எழுப்பிய போது அவர் பதில் வழங்கவில்லை. (2)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை குடத்தனை, மணற்காடு, அம்பன், வலிக்கண்டி, பொற்பதி ஆகிய இடங்களிலும்,

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வித்தகபுரம், கொல்லன் கலட்டி, நகுலேஸ்வரா வீதி, கூவில், வசந்தபுரம் ஆகிய இடங்களிலும்

வரும் 8–ம் திகதி செவ்வாய்க்கிழமை, மறுநாள் புதன்கிழமை, 10–ம் திகதி வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை நெடுந்தீவுப் பிரதேசத்திற்கும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ)

## தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் மாநாட்டில் பங்கேற்க முடியாது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களின்ால் எதிர்காலத்தில் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் பங்கேற்க முடியாது என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்ட ஆறு புலிகளுக்கு ஆதரவான வெளிநாட்டு தமிழ் அமைப்புக்களால் மாநாட்டில் பங்கேற்க முடியாது.

பிரிட்டன் தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை, கனேடிய தமிழர் காங்கிரஸ் உள்ளிட்ட வெளிநாட்டு தமிழ் அமைப்புக்கள் மனிதவுரிமைப் பேரவை மாநாடுகளில் பங்கேற்று வந்தன.

எனினும், இலங்கையில் குறித்த அமைப்புக்களுக்கு தடை விதிக்கப்பட்ட காரணத்தினால் மனிதவுரிமை பேரவை மாநாடுகளில் எதிர்காலத்தில் இந்த அமைப்புக்களினால் பங்கேற்க முடியாது என குறித்த சிங்களப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அமைப்புக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் தொடர்புகளை பேணச் சந்தர்ப்பம் கிடையாது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## அருளுரையும் விளக்கமும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத் தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணியிலிருந்து 7.30 மணி வரை தவம் என்ற கருப்பொருளிலான அருளுரையும் 15 நிமிடங்களுக்கு அது தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமும் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகளால் நடத்தப்படவுள்ளது. (2)

## போலி நாணயத்தாள்களை கண்டறிய இயந்திரம்

(கொழும்பு)

அனைத்து வங்கிகளுக்கும் மற்றும் முதலீட்டு நிறுவனங்களுக்கும் போலி நாணயத்தாள்களை கண்டறியும் புதிய இயந்திரம் ஒன்றை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அதிகமான போலி நாணயத்தாள்கள் தொடர்பிலான செய்திகள் வெளியானமையை கருத்தில் கொண்டே இந்த இயந்திரத்தை அறிமுகப்படுத்த தீர்மானம் எடுத்ததாக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (2)

## விஞ்ஞான சங்கத்தின் பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினரால் இவ்வாண்டு வட மாகாண பாடசாலைகளுக்கிடையே விஞ்ஞானப்போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது. இதற்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான கட்டடத் தொகுதியில் (1B) நடைபெறும்.

பரிசில்கள் பெறும் மாணவர் விபரம் ஏற்கெனவே குறித்த பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பரிசில்கள் பெறும் மாணவர்களை இந் நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறை உதவிப் பொதுச் செயலாளர் கலாநிதி ப.செவ்வேள் அறிவித்துள்ளார். (2)

## இஸ்லாம் ஆன்மிக சிந்தனை

### தீர்ப்பு கூறுதல்

"உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றிற்குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைக்க வேண்டுமென்றும் மனிதர்களிடையே தீர்ப்புக் கூறினால் நீதியாகவே தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான்; நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு எதனை உபதேசம் செய்கிறானோ அது மிக நல்லதாகும்; நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான்"

(திருக்குர்ஆன் 4:58)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து வலிகாம எல்லைக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டிகளை நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் யாவும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

வெற்றி பெறும் அணிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தரிடமோ அல்லது யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் இணைப்பாளர் சி.தயாளபாலனிடமோ 0776622078 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (சு-23)

## வவுனியா வடக்கு வலய விளையாட்டுப் போட்டி

(பூந்தோட்டம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் விளையாட்டுப் போட்டி நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை புளியங்குளம் இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விளையாட்டுப் போட்டிக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (சு-266)




## கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ச.குகதாஸ், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகர சபையின் நகரபிதா சபா.ரவீந்திரன், பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீ.ரங்கேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி என்.ஆர்.மோகன்ராஜ், யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் ந.தெய்வேந்திரராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

தொடர்ந்து ஆண்கள் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. இதில் வல்வை விளையாட்டுக்கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

ஆண்கள்கூடிஇறுதிப்போட்டியில்சென். தோமஸ் விளையாட்டுக்கழகமும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (2)

# தேசிய இளைஞர் சேவைமன்ற சைக்கிள் ஓட்டப்போட்டி



தேசிய இளைஞர் மாநாட்டுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட சைக்கிள் ஓட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை வவுனியாவை சென்றடைந்தது.

யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தினால் யாழ்ப்பாணத்தில் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்ட இச் சைக்கிள் ஓட்டப் போட்டியை இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் விவகார திறன்விருத்தி அமைச்சு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிலையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய முன்றலை மதியம் வந்தடைந்த இச் சைக்கிள் ஓட்டமானது வவுனியா அரசாங்க அதிபரினால் நிறைவு செய்யப்பட்டிருந்தது.

நேற்று காலை வவுனியாவில் ஆரம்பமாகிய இச் சைக்கிள் ஓட்டமானது இரண்டு நாட்களில் கொழும்பை சென்றடையும். (சு-266)

# ஸ்ரீ பாலமுருகன் வி.கழகம் அங்குரார்ப்பண நிகழ்வு



(சாவகச்சேரி)

கிதாம்புவில் ஸ்ரீ பாலமுருகன் விளையாட்டுக்கழக அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை படையாண்டான் கந்தசுவாமி ஆலய முன்றலில் நி.சிவறஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன், சாவகச்சேரி நகர சபை தவிசாளர் இ.தேவசகாயன்பிள்ளை மற்றும் நகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் நி.சிவறஞ்சனும் உப தலைவராக சி.சுதர்சனும், செயலாளராக பா.திபாகுகனும் உப செயலாளராக வி.விதுஸனும் பொருளாளராக பா.தினூபனும் கணக்காய்வாளராக க.சத்தியானந்தனும் போசகராக பாலகுமாரக்குருக்கள் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (சு-29)

# தேசிய மட்ட ஹொக்கிப்போட்டி



இலங்கை பாடசாலை ஹொக்கிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டிகள் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னெல் மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகியது.

இச் சுற்றுப்போட்டி 19 வயதுப் பிரிவினருக்கிடையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் தேசிய ரீதியில் 22 ஆண்கள் பாடசாலை அணிகளும் 16 பெண்கள் பாடசாலை அணிகளும் பங்குபற்றுகின்றன.

லீக் முறையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் தெரிவுப் போட்டிகள் இடம்பெற்று இன்று 4 ஆம் திகதி காலிறுதிப் போட்டிகள் ஆரம்பமாகவிருக்கின்றன.

தொடர்ந்து அரையிறுதிப் போட்டிகள் இடம்பெற்று நாளை 5 ஆம் திகதி இறுதிப் போட்டி இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் இணைப்பாளர் பிரான்சிஸ் சந்திரன் தெரிவித்துள்ளார். (சு-23)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அச்சுவேலி பொலிஸ் நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி

(நல்லூர்)

எதிர்வரும் தமிழ்/சிங்கள சித்திரைப்புத்தாண்டு தினத்தை முன்னிட்டு அச்சுவேலி பொலிஸ் நிலையம் நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை அச்சுவேலி பலநோக்குசங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது என அச்சுவேலி பொலிஸ் நிலையம் அறிவித்துள்ளது.

இதற்கமைய காலை 6 மணிக்கு ஆண்களுக்கான சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு கிறிஸ் கம்பம் ஏறுதல், தலையணைச் சண்டை, ஆண், பெண் இருபாலாருக்குமான கயிறு முத்தல், யானைக்கு கண் வைத்தல், முட்டி உடைத்தல், சங்கீத தொப்பி, பெண்களுக்கான தேங்காய் துருவுதல் போன்ற விளையாட்டுக்களும் 5 வயதுக்குட்பட்டவர்களுக்கான பலூன் ஊதி உடைத்தல் போன்ற விளையாட்டுக்களும் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்டவர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (சு-134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண இருபது-20 இறுதிப் போட்டிக்கு இலங்கை தகுதி



**இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டிக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது. நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியை டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 27 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.**

நடப்பு சாம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் அணி தோல்வியடைந்ததை அடுத்து தனது பட்டத்தை இழந்தது.


மிகவும் பரபரப்புக்கு இடையே தொடங்கிய இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய இலங்கை அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 160 ஓட்டங்களை எடுத்தது.

மஹேல ஜெயவர்த்தன முதல் பந்திலேயே ஓட்டமேதும் எடுக்காமலும், குமார் சங்கக்கார ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்த போதிலும் பெரேரா, டில்ஷன், திருமான்னே மற்றும் மத்யூஸ் ஆகியோர் அதிரடியாக ஆடி இலங்கை அணி 160 ஓட்டங்களைப் பெற உதவினர்.

பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அதிரடியாக ஆட்டத்தை தொடங்கினாலும் அந்த வேகத்தை தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை.

நான்கு விக்கெடுகள் இழப்புக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி 13.5 ஓவர்களில் 80 ஓட்டங்கள் எடுத்திருந்த வேளையில், திடீரென ஆலங்கட்டி மழை பெய்ய ஆரம்பித்து, வேகமாக ஆடுகளத்தில் மழைநீர் பரவியதை அடுத்து ஆட்டம் நிறுத்தப்பட்டது.

பின்னர் ஆட்டம் தொடர வாய்ப்பு இல்லை என்று நடுவர்கள் முடிவு செய்ததை அடுத்து, ஆட்டம் கைவிடப்பட்டு மழையினால் ஆட்டம் நின்று போனால் முடிவை நிர்ணயிக்கும் டக்வேர்த் லூயிஸ் கணக்கீட்டு முறைப்படி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றதாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது. இப் போட்டியின் ஆட்ட நாயகனான இலங்கை அணியின் மத்தியூஸ் தெரிவானார்.



இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்திய- தென்னாபிரிக்க அணிகள் மோதுகின்றன. (க)

## ஜனாதிபதி...

இலங்கையுடன் ஏனைய நாடுகளும் ஆக்கபூர்வமான பேச்சுக்களில் ஈடுபடவேண்டுமென சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

இலங்கை மக்களுக்கு உண்மையில் தேவை அபிவிருத்தி. மக்கள் தங்களினதும் மற்றும் அவர்களின் பிள்ளைகளினதும் எதிர்காலம் குறித்து மிகவும் ஆர்வமாக உள்ளனர் என தெரிவித்தார்.

சிங்கப்பூர் அரசாங்கம் வடக்கில் பல செயற்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகின்றது. இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் அவர், நடமாடும் நூலகம் மற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சித்திட்டம் என்பவற்றை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இது போன்ற பயிற்சித் திட்டங்களை தொடக்கி வைக்க வேண்டுமென இதன்போது வலியுறுத்தினார்.

இலங்கை - சிங்கப்பூருக்கிடையிலான உறவு மிகவும் நல்லது. இரு நாடுகளுக்கிடையேயான உறவுகள் மக்களுக்கிடையிலான பரஸபர உறவினை வலுப்படுத்திக் கொள்ள உதவுமெனவும் நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுகா செனவிரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-11)

## றெக்சியன்...

பட்டார்.

சம்பத்தினையடுத்து வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன், றெக்சியனின் மனைவி அனிதா மற்றும் முச்சக்கரவண்டி சாரதி ஒருவரும் சந்தேகத்தின் பேரில் ஊர்காவற்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் படி தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொலை தொடர்பிலான வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் நீதிபதி லெனின் குமார் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி பிரதான சந்தேகநபரான கமலேந்திரன் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (எ-11)

## கேப்பாப்பிலவு...

கோத்தபாய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ள 65 குடும்பங்களுக்கு வழங்குவதற்கென நிரந்தர வீடுகளுக்கான அடிக்கல்லையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இந்த நிகழ்வின்போது நாட்டியுள்ளார்.

அத்துடன் பாதுகாப்புப் படையினரின் வசமுள்ள கேப்பாப்பிலவு கிராமத்தின் ஒரு பகுதியாகிய வயல் காணிகளில் 100 ஏக்கர் காணிகளும் நேற்று விமானப்படையினருடைய பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு கிராமவாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 165 ஏக்கர் வயல் காணிகள் விமானப்படையினர் வசம் இருப்பதாகவும், அவற்றையும் உரியவர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் இந்த நிகழ்வின்போது, மகஜர் கையளிக்கப்பட்டிருப்பதாக கேப்பாப்பிலவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராசையா பரமேஸ்வரன் தெரிவித்தார். (எ-11,267)

## தோனியின் ரசிகர்களுக்கு பல்ப்!



இந்திய கிரிக்கெட் அணியின் அணித் தலைவர், தோனி, சாக்ஷி ரவாத் திருமணம் 2010ம் ஆண்டு நடைபெற்றது.

இந்நிலையில், தோனி முதன் முறையாக அப்பா ஆகப்போகிறார் என்ற செய்தி வெளியானது.

தற்போது கர்ப்பமாக இருக்கும் சாக்ஷிக்கு யூலையில் குழந்தை பிறக்கப் போவதாகவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக ரசிகர்களிடமிருந்து சாக்ஷியின் டுவிட்டர் பக்கத்தில், ஏராளமான வாழ்த்துக்கள் குவிந்துள்ளது. இதுகுறித்து சாக்ஷி நேற்று தனது டுவிட்டர் பதிவில், ஏப்ரல் 1-ம் திகதியில் யாரோ நன்றாக ஏமாற்றி இருக்கிறார்கள்.

ஆனாலும், தோனி மீது ரசிகர்கள் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்கள் என்பதை எனக்கு வந்த வாழ்த்து செய்திகள் மூலம் புரிந்து கொண்டேன். நீங்கள் எதிர்பார்ப்பது நிச்சயம் விரைவில் நடக்கும் என கூறியுள்ளார்.

## முல்லை...

அண்மித்துள்ள பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.42 மணியளவில் பாரிய வெடிப்புச்சத்தம் ஒன்றை கேட்டதாக பிரேதசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தை அடுத்து குறித்த பகுதியில் கறுப்பு நிற புகைப்படலங்கள் மேலெழுந்ததை அவதானிக்க முடிந்ததாகவும் பிரதேசவாசிகள் கூறியுள்ளனர்.

மக்கள் நடமாடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு பகுதியிலேயே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

வெடிப்புச் சத்தத்தின் அதிர்வுகள் பல நூறு மீற்றர்கள் வரை எதிரொலித்துள்ளன.

சம்பவத்தை அடுத்து இராணுவ அம்புலன்ஸ் வண்டிகள் பெரும் சத்தத்துடன் ஓடித் திரிந்ததாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த சம்பவத்தை அடுத்து பிரதேசத்தில் மக்கள் மத்தியில் ஒரு பதற்றத்தை காணக் கூடியதாக இருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## சாதாரண...

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 10 மாணவர்கள் 9 ஏ சித்தியும் யாழ்.இந்துக் கல்லூரியில் 9 மாணவர்கள் 9 ஏ சித்தியும் பெற்றுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளில் 9 ஏ சித்திபெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

**ஆங்கில மொழி மூலம்**

அபிராமி ரவிதரன்
ஜனந்தினி சிவபாலன்
லக்சிகா உதயகுமார்
பிரியங்கா கிறிஸ்ரியன்
ராகவி ராகவன்
சங்கவி சுதானந்தராஜா
சஸ்மீரா ஸ்ரீ கணேசன்
வினுசியா பத்மநாதன்

**தமிழ் மொழி மூலம்**

விஷ்ணுபிரியா ரவீந்திரன்
பிரியங்கா நித்தியானந்தராஜா
ரதினி சண்முகலிங்கம்
அபிராமி நற்குணம்
கஜேந்தினி பாலேந்திரராஜா
நிஷானி பூவலிங்கம்
சுபேஸ்கா மோகன்ராஸ்
பவதாரணி கோகுலானந்தன்
பென்றி அன்ரன் ஜேசுதாஸ்
ரக்ஷனா ரவீந்திரன்
கௌதமி விஜயகுமார்
சங்கவி திருச்செல்வம்
கௌசியா சுந்தர்
சுபஸ்திகா ஞானசம்பந்தன்
சஜித்தா ஜீவரட்ணராஜா
சாருஜா சற்குணராஜா
மதுசா சிவயோகன்
சர்மினி ஜெயசீலன்
ருட்சிகா நவரட்ணம்
நிலுஜா மகாதேவன்

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

யோகேஸ்வரஐயர் விக்னேஸ்வரன்
கிருஷிகா மகேந்திரராஜா
கவிப்பிரியா மனோகரன்
லக்ஷிகா ராம்குமார்
பிரகாஷினி [illegible]
சாவித்திரி சிவதாசன்
தானுநாதசர்மா வித்யாசாகரன்
தேவகுமார் லுகீதரன்
கருணாநிதி சர்ஜனன்
கணேசபிள்ளை வாகீசன்

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**

**தமிழ் மொழி மூலம்**

கணேசலிங்கம் பிரசாந்
தேவகுமாரன் ரஜிந்தன்
கனகலிங்கம் சங்கீத்
சிவபாலன் சங்கீத்தன்
யோகேஸ்வரன் சுவஸ்திகன்

**ஆங்கில மொழி மூலம்**

சத்தியசீலன் கோகுலன்
பத்மநாதன மேஷிகன்
சிவயோகம் சரண்யன்
ஆனந்தகுமார் வேதாகுலன்

**பற்றிக்ஸ் கல்லூரி**

ம.மதுஷன்
ஜி.நிலக்ஷன்
என்.லோகசீலன்

**புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**

செவ்வநாயகம் சுபனேந்திரா
[illegible] (எ-11)

STUDY IN UK, LATVIA
EUROPE
City & Guilds Approved Centre
G.C.E O/L சித்தியடைந்திருந்தலே போதும்.
அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
5 வருடகால அனுபவம் மிக்க வீசா சட்டஆலோசகரால் வீசா சட்டஆலோசனை.
தமிழ்-சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 07.04.2014 தொட 11.04.2014 வரை வெளிநாட்டு கல்வி மற்றும் கல்விசார நேர்த்தியான வீசா சட்டஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும்...
WEC
நிறுவனத்தினர் தற்பொழுது யாழ்நகரிலும் தமது IELTS, City&Guilds (A1,B1), German Deutsch, French வகுப்புக்களினை ஆரம்பித்துள்ளனர்.
கடந்த 7 மாதங்களில் மட்டும் எமது நிறுவனத்தினூடாக 40 மாணவர்களிருகுமேல் City&Guilds English Diploma (UK) A1,B1 பரீட்சையில் சிறந்த,அதிசிறந்த பெறுபேறுகளை தட்டிச்சென்றுள்ளனர்.
City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.
WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri.
021 7200 989; 0779265447
Branch:
No.04, Kesavil Road, Kokkuvil, Jaffna.
(க-6870)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NEC** மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
இரு இடத்திலும்

A/L 2016 புதிய பிரிவு

**தொழில்நுட்ப பிரிவு**
ஆரம்பம் : 05.04.2014 சனி :- 9.00 Am

- முன்னணி தொழில்நுட்ப விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை
- செயன்முறை ரீதியான கற்பித்தல் வசதி.
- நவீன ஆய்வு கூட வசதி
- பல்ஊடக (Multi Media) வகுப்பறை வசதி

(C-6865)


# சிங்கப்பூர் அமைச்சர் முதலமைச்சருடன் சந்திப்பு

இலங்கைக்கு வருகை தந்துள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர கே.சண்முகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணத்துக்கு வரும அவர்வட மாகாண முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து யாழ். பொது நூலகத்திற்கு செல்லும் அவர "மலேசியன் கோர்னருக்கு" ஒரு தொகை நூல்களை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)


**A/L பொருளியல் நூல்**
வறுமை & வருமானப்பரம்பல்
வே.கருணாகரன்
விலை ரூபா 70
பூபாலசிங்கம் புத்தகசாலை,
அன்னை புத்தகசாலை.
(6060)



உங்கள் அலுவலகம் அல்லது வீட்டு கணினிகள் பிரச்சினையா...?
**Computer Repair**
DTP (Graphics Designing) கற்பிக்கப்படும்
T-shirt Printing
கணினி திருத்தம் மற்றும் கணினி தொடர்பான உதவிகளுக்கு...
விரைவான சேவைக்கு.. 0774724075
(C-6867)



**விசேட வகுப்புக்கள்**
துறைசார் விரிவுரையாளர்களினால் விரிவான விளக்கத்துடன்
❖கணக்காளர் ❖கணக்காய்வாளர்
பரீட்சைக்கான வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில்
ஆரம்பம் :- சனி (5/4) காலை 11.00 மணி
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்நகர் 075 416 4564
(6059)



**G.C.E (O/L) பரீட்சை எழுதிய மாணவர்களின் உயர் கல்வி மற்றும் எதிர்கால நலன் கருதி குறுகிய காலப் பயிற்சிநெறிகள்**

பல்கலைக்கழக கல்வி,
வேலைவாய்ப்பு,
வெளிநாட்டில் உயர்கல்வி,
ஏனைய கற்கை நெறிகளை
மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?



ஆங்கில அறிவு இல்லாமல் இவை எதுவுமே சாத்தியப்படாது.

சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick Learning Course)

**DIPLOMA IN ENGLISH**

- இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
- British Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
- Excellent Teachers' Panel & Individual attention
- எமது நிறுவனம் City & Guilds, British Council அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

Batch1: 05/03/2014
Batch2: 07/03/2014
Batch3: 16/03/2014

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

BCHS
Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna.

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Tel:0212224550 Hotlines: 0777585913, 0777222422, 0714299935, 0777730074
(C-6862)



**DCM** (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
கணக்கீடு
AP.பகீரதன்
B.B.A(Fm.Spl)

A/L - 2015
கட்டுப்பாட்டுக் கணக்கு
sat sun 8 -9
சொத்து விற்பனை
sat sun 9 -10
ஆரம்பம் - 05.04.2013

A/L - 2016
பிரிவு II
வர்த்தகப் பிரிவு
பொருளியல்
வரதராஜன்
கணக்கீடு
பகீரதன்
வணிகக்கல்வி
முரளி
ஆரம்பம் - 05.04.2013
(C-6868)



**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
இரு இடத்திலும்
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2016 புதிய பிரிவு
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் : 05.04.2014
(C-6865) சனி :- 9.00 Am



**DCM** யாழ்.நகர்
A/L 2016
கலை, வர்த்தக,தொழில் நுட்ப புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 05.04.2014 காலை 9 மணி
(C-6868)



**பேக்கரி உரிமையாளர்கள், கேக் தயாரிப்பாளர்கள், பிஸ்கற் தயாரிப்பாளர்களின் கவனத்திற்கு!!!**

காலம் காலமாக தரத்தில் உங்கள் நம்பிக்கையை வென்ற றோயல் பேக்கிங் பவுடர் தற்பொழுது 01Kg பைக்கற்றில் !! மிருதுவான கேக் தயாரிப்பதற்கும், அனைத்து வகையான பேக்கரி மற்றும் பிஸ்கற் தயாரிப்புகளிற்கும் இன்றே பாவியுங்கள். தரத்திற் சிறந்த விலையில் குறைந்த

"றோயல் பேக்கிங் பவுடர்"




Specially Made for Bakery Uses

Manufactured By:-
Royal Industries
No.22, 1/1, Adamally Building,
Wolfendhal Street, Colombo-13.

ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே:0212222567
(C-6841)




அண்மையில் கனடா பூநகரி சமூக அபிவிருத்தி சங்கம் நடத்திய அரச பூங்கா கலை விழாவில் தர்சன் திருஞானபவன் மற்றும் வாகீசன் சதானந்தபவன், வைஸ்ணவி சதானந்தபவன் மற்றும் கீதம் அக்கடமி நடத்திய கலை விழாவில் சாயிசன் பிரபாகரன், பபிசன் பிரபாகரன் ஆகியோரின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

(5804)


**சுந்தர்சன் நிறுவனம் 34 ஆம் ஆண்டில் காலடி பதிக்கின்றது**

Abans - Highest Sales Achievement 2013 & Winner of the Northern Province 2013
Singer - Gold Group Winner 2014 & A to Z - All Island Winner 2011 & 2012




சிறுவர்களுக்கான
பல வர்ண மேசை,கதிரை
கண்ணாடியிலான
சாப்பாட்டு மேசை, கதிரை
கணினி மேசை
LED மின் விளக்குகள்
மேலும் பல புதியவரவுகள்...

அன்பார்ந்த வாடிக்கையாள பெருமக்களே : எமது நிறுவனத்தின் முன்னேற்றத்தை விரும்பாத சில விஷமிகள் தமது குறுகிய இலாபத்திற்காக எமது வியாபார மேம்பாட்டினை கொச்சைப்படுத்தி வேண்டத்தகாத வதந்திகளை பரப்பி வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளால் எமது வியாபார செயற்திறன் வலுவிழந்து விடவில்லை. தொடர்ந்தும் வாடிக்கையாளர் சேவை திறம்பட நடைபெற்று வருகின்றது என்பதனை யாவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.
(C-6858)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org